பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 27 திங்கட்கிழமை 12.07.2021 கதிர் 249

**இது ரகசியம் அல்ல!**

மஹிந்தர் வீட்டில் ரணிலுக்கு விருந்துபசரிப்பு. அது பற்றிய படம் சமூக ஊடகங்களிலும் வந்ததும் அதைப் பார்த்த நான் சுமந்திரன் எம்.பிக்கு ஒரு தொலைபேசி அழைப்பு எடுத்தேன்.

இப்படி சில படங்கள் சமூக ஊடகங்களில் வந்தமை பக்கம்02»

# அரசிலிருந்து வெளியேறுமா சு.க.? 21இல் கோட்டாவுடன் முக்கிய பேச்சு

## கொழும்பு அரசியலில் பரபரப்பு



கொழும்பு, ஜுலை 12

அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் இறுதி முடிவெடுப்பதற்கு முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவை எதிர்வரும் 21ஆம் திகதி நேரில் சந்திக்கின்றது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

இந்தத் தகவலை அக்கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர நேற்று தெரிவித்தார். 2

## மேலும் 35 பேர் சாவு!

கொரோனாவைரஸ்தொற்றால் மேலும் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

18 பெண்களும் 17 ஆண்களும் 2

## நேற்று தொற்று 1,507

கொரோனாவைரஸ்தொற்றுடன் நேற்று 1,507 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் 2

## யாழ்.பல்கலைக் கழக விடுதியிலும் தொற்று!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுலை 12

யாழ்ப்பாணம்பல்கலைக்கழகத்தின் கோண்டாவில் விடுதியில் தங்கியிருந்த மூன்று மாணவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதனால் விடுதியில் உள்ள யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் விடுதியில் 200 வரையிலான மாணவர்கள் தங்கியிருந்த நிலையில் 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதோடு மேலும் சிலருக்கு மீள் தொற்றுப் பரிசோதனைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கொரோனாத் தொற்று 2

## 'மொட்டு' கூட்டணியிலிருந்து மைத்திரி அணி வெளியேறுவதால் அரசுக்கு பாதிப்பு இல்லை

### இப்படிக் கூறுகின்றார் திலும் அமுனுகம



ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணி கூட்டணியில் இருந்து மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறுவதால் அரசின் இருப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கடந்த பொதுத்தேர்தலில் 'தாமரை மொட்டு' சின்னத்தில் போட்டியிட்டதாலேயே மக்களின் ஆதரவைப் பெற்றார்கள்.

– இவ்வாறு போக்குவரத்து மற்றும் சமுதாய பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் 2

## அமைச்சுப் பதவியைப் பறித்தால் ஒருபோதும் கவலைப்படமாட்டேன்

### கம்மன்பில நேற்று தெரிவிப்பு



எனது அமைச்சுப் பதவியை ஜனாதிபதி பறித்தால் அது தொடர்பில் நான் கவலைப்படமாட்டேன் என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஹங்வெல்ல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமரின் பரிந்துரைக்கமைய ஜனாதிபதிக்கு எந்தவொரு அமைச்சுப் பதவியையும் மீளப் பெறவும் முடியும். அதனை மாற்றியமைக்கவும் முடியும்.

அந்தவகையில் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அமைச்சுப் பதவியை என்னிடமிருந்து பெற்று வேறு 2

## பரீட்சை திகதிகளில் மாற்றம்

கொழும்பு, ஜுலை 12

2021ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளுக் காக முன்னர் அறிவிக்கப்பட்ட திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

தரம்5புலமைப்பரிசில்பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதியும், உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையும் நடத்தவுள்ளதாக கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது.

எனினும், அதிகமான மாணவர்கள் தமக்கான பாடவிதானங்கள் உரியமுறையில் நிறைவு செய்யப்படாததால் பரீட்சையைப் பிற்போடுமாறு கோரியுள்ளனர் என்று கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பரீட்சைகள் தொடர்பில் மேலும் ஆராய்ந்த பின்னர் பரீட்சைகள் இடம்பெறும் திகதிகள் அறிவிக்கப்படும் எனக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா நேற்று தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் 48 பேர் உட்பட வடக்கில் 66 பேருக்குத் தொற்று

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வடக்கு மாகாணத்தில் 66 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று 850 பேருக்கு பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன் முடிவுகளின் பிரகாரம் யாழ்ப்பணம் மாவட்டத்தில் 48 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூவருக்கும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 பேருக்கும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 05 பேருக்கும், யாழ்.போதனா வைத்தியசாலையில் 05 பேருக்கும், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் ஒருவருக்கும், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2

## பொத்துவிலில் மாயமான 2 மீனவர்கள் 14 நாள்களின் பின்னர் உயிருடன் மீட்பு

(எஸ்.அஷ்ரப்கான்)



அம்பாறை மாவட்டம், பொத்துவில் கடலில் காணாமல்போன இரு மீனவர்கள் 14 நாள்கள் கடந்த பின் திருகோணமலை கடற்பகுதியில் நேற்று உயிருடன் மீட்கப்பட்டனர். அவர்கள் இருவரும் நேற்றிரவு பொத்துவிலை வந்தடைந்தனர்.

காணாமல்போன மீனவர்கள் இருவரும் திருகோணமலை கடற்பகுதியில் இருந்து சுமார் 85 கிலோமீற்றர் தொலைவில் திருகோணமலையைச் சேர்ந்த ஆழ்கடல் மீன்பிடிப்படகு ஒன்றின் உரிமையாளர் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு கரை திரும்பினர்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பார்த்தீர்களா என்று கேட்டேன். *"ஆம் பார்த்தேன்"* – என்றார் அவர்.

*"முகப் புத்தகங்களில் இதையொட்டி அன்பர் ஒருவர் கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார். பார்த்தீர்களா?"* – என்றேன்.

*"இல்லையே. என்ன கேள்வி?"* – என்று கேட்டார். நான் கேள்வியைச் சொன்னேன்.

*"அரசியல் எதிரிகளான மஹிந்தரும் ரணிலும் ஒரு வீட்டில் அமர்ந்து உணவு உண்பார்கள். ஒருவரை மற்றவர் குடும்பம் எவ்வளவு பரிவோடு உபசரிக்கின்றது பார்த்தீர்களா? இப்படி கஜேந்திரகுமார் வீட்டில் சுமந்திரன் அமர்ந்திருந்து உணவு உண்ண முடியுமா? இதுதான் அந்தக் கேள்வி"* – என்றேன்.

ஹ்ஹா... என்று சிரித்தார் சுமந்திரன்.

அதுதான் நமது தமிழர் தரப்பின் அரசியல் நிலைமை.

அரசியலுக்கு அப்பால் – அது கடந்து – நட்பும், பரிவும், அந்நியோன்னியமும் நம் மத்தியில் இல்லைத்தான்.

கடைசி நேரம் வரை தம்முடன் இருந்து விட்டு, காலை வாரி, தம்மை அதிகாரத்தில் இருந்து கலைத்த மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாக இருந்த போதும் சரி, இப்போது சாதாரண எம்.பியாக இருக்கும் போதும் சரி தரக்குறைவாக அவரை நடத்தியவரல்லர் இப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

மஹிந்தவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிடும் முடிவை எடுத்து, அதைப் பகிரங்கமாக அறிவித்த பின்னர் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகும் தமது கடிதத்தைக் கையளிப்பதற்காக அலரிமாளிகைக்குச் சென்ற மைத்திரிபால சிறிசேனவை நோக்கி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சத்தமிட்டு எதிர்ப்புணர்வைக் காட்டினார்தான். ஆனால் அது தமது கட்சிச் செயலாளரே கட்சித் தலைவரான தமக்கு எதிராகக் கிளர்ந்து, முதுகில் குத்துகின்றாரே என்ற உணர்வில் எழுந்ததே தவிர, அரசியல் காழ்ப்புணர்வில் எழுந்தது அல்ல.

அதற்குப் பின்னரும் இவரின் நிகழ்வுகளில் அவரும், அவரின் நிகழ்வுகளில் இவரும் தாராளமாகப் பங்கு கொள்கின்றனர்.

அரசியல் வேறு, சமூகப் பழக்க வழக்கங்கள் வேறு என்ற உயரிய மாண்பு பேணுவது தென்னிலங்கையில் உண்டு.

இயக்கப் பாணியை ஒட்டிய அரசியலில் இருந்து நாம் இன்னும் விடுபடாத காரணத்தினால் நம் மத்தியில் அந்தப் பண்பு இன்னும் சரியாகக் காலூன்ற வில்லை போலும்.

ரணிலுக்கு மஹிந்தர் வீட்டில் விருந்தளித்தவர் மஹிந்தவின் துணைவியார் ஷிராந்தி ராஜபக்ஷவின் சகோதரரான நிஷாந்த விக்கிரமரத்ன என்று தகவல்.

நல்லாட்சிக் காலத்தில் நிஷாந்த விக்கிரமரத்னவின் விடயங்களை 'நன்கு' கவனித்தமைக்கு நன்றி தெரிவிக்கும் விருந்தாக இது இருக்கக் கூடும் என்றார் என் தென்னிலங்கை நண்பர் ஒருவர்.

ஆனாலும் இந்த விருந்தை ஒட்டிய காலத்தில் ரணிலுக்கு மேலும் சில வசதி, வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்கின்றார் தென்னிலங்கை செய்தியாளர் ஒருவர்.

நீதியரசர் விக்னேஸ்வரனின் கட்சி, பிள்ளையானின் கட்சி போன்று ஐக்கிய தேசியக் கட்சியும் இம்முறை ஒரேயொரு ஆசனத்துடன்தான் நாடாளுமன்றம் சென்றிருக்கின்றது. அதன் எம்.பியான ரணில் விக்கிரமசிங்க 45 வருடங்கள் தொடர்ந்து எம்.பியாக இருக்கின்றார். முன்னாள் பிரதமர், முன்னாள் அமைச்சர் என்ற சிரேஷ்ட தன்மை கருதி நாடாளுமன்றத்தில் அவருக்கு முதல் வரிசை ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும் தப்பில்லை.

அளவுக்கு அதிகமான மெய்ப்பாது காவலர்கள், முன், பின் செல்லும் வாகனப் பாதுகாப்பு அணிகள் என்று அளவுக்கு அதிகமான வசதிகள். அவையும் கூட முன்னாள் பிரதமர் என்ற முறையில் அவருக்கு வழங்கப்பட்டவை என நியாயப்படுத்தலாம்.

ஆனால், ஒரேயொரு எம்.பியை மட்டும் கொண்ட அவருக்கு – அவரது கட்சிக்கு நாடாளுமன்றத்தில் தனி அறை (அலுவலகம்) ஒதுக்கிக் கொடுக்கப் பட்டிருக்கின்றது.

அது, கடந்த வாரம் இந்த விருந்துக் காலத்தை ஒட்டி நடந்த விவகாரம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரணில் கிழட்டு நரி, மஹிந்த கிழட்டுச் சிங்கம். நல்ல இணைதான் போங்கள்.

– மின்னல் –

---

## அரசிலிருந்து வெளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அரசியல் பிரச்சினை உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாட எதிர்பார்த்திருப்பதாகவும், அந்தச் சந்திப்பின் பின்னர் முன்னோக்கிப் பயணிப்பதற்கான சூழ்நிலை உருவாகும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அரசியிலிருந்து வெளியேறுமாறும் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறுவது கொழும்பு அரசியலில் முக்கியத்துவம்மிக்கதாகக் கருதப்படுகின்றது.

மேற்படி சந்திப்பின் பின்னரே சுதந்திரக் கட்சியினரின் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது எனவும் தயாசிறி ஜயசேகர மேலும் கூறினார்.

---

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 74 ஆயிரத்து 538 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 44 ஆயிரத்து 437 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப் படுத்தல்மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 599 ஆக அதிகரித்துள்ளது.

---

## யாழ்.பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
உறுதி செய்யப்பட்ட மாணவர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகியவர்கள் மட்டும் தனிமைப்படுத்தலிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இதேநேரம் இந்த விடுதியில் இருந்த யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த அனைவரும் உடனடியாக வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் தொடர்ந்தும் விடுதியிலேயே தங்கியுள்ளனர்.

இவ்வாறு வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களினால் கொரோனா பரவல் ஏற்படுமா என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம் தொடர்ந்தும் விரிவுரைகள் இடம்பெறும் எனவும், விரிவுரைகளுக்கு இன்று முதல் சமுகமளிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

---

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 502 ஆக அதிகரித்துள்ளது. என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மோசமான விளைவுகளை ராஜபக்ஷ அரசு சந்திக்கும்

## சம்பந்தன் கடும் எச்சரிக்கை



வன்முறையில் இறங்காமல் ஜனநாயக வழியில் ஆர்ப்பாட்டம் நடத்தும் மக்களைப் பொலிஸாரைக் கொண்டு காடைத்தனமான முறையில் அடக்குவது அரசின் சர்வாதிகாரப்போக்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. ராஜபக்ஷ அரசின் இந்த அராஜகம் தொடர்ந்தால் மோசமான பின் விளைவுகளை அது விரைவில் சந்தித்தே தீரும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிராக ஜனநாயக வழியில் எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டு வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்முறையில் இறங்காமல் ஜனநாயக உரிமைகளை வெளிப்படுத்தக் கூடிய வகையில் – குற்றங்கள், குறைகள், நியாயங்களைப் பகிரங்கமாக எடுத்தியம்பக்கூடிய வகையில் மக்கள் ஒன்றாகக் கூடி தங்களுடைய குரலை அரசுக்கு எதிராக எழுப்புவது மறுக்க முடியாத அடிப்படை உரிமை.

அந்த அடிப்படை உரிமை – ஜனநாயக உரிமை மறுக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அவ்விதமான உரிமை மறுக்கப்பட்டால் அது நாட்டினுடைய போக்கு நல்லதல்ல என்பதை எடுத்துக்காட்டும். அது சர்வாதிகாரத்தின் போக்கை வெளிச்சம் போட்டுக்காட்டும். இந்த அராஜகத்தைத் தான் ராஜபக்ஷ அரசு செய்து வருகின்றது.

இந்த அரசுக்கு எதிராக ஜனநாயக வழியில் எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

இது ஜனநாயக நாடு எனில் மக்கள் சட்டத்துக்கு உட்பட்டு சுதந்திரமாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் உரிமை இருக்கின்றது. அந்த உரிமை மதிக்கப்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோள் – என்றார்.

---

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஒருவருக்கும், சங்கானை சுகாதா வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

---

## 'மொட்டு' கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
குறிப்பிடுகையில்,

ஆளும் தரப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகவே உள்ளார்கள்.

2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான 'தாமரை மொட்டு' சின்னத்தில் போட்டியிட்டது. இதன் காரணமாகவே அவர்களுக்கு இரண்டு, மூன்று ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன. தனித்துச் சென்றிருந்தால் 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளே சுதந்திரக் கட்சிக்குக் கிடைக்கப் பெற்றிருக்கும்.

வேறு கட்சி என்ற அடிப்படையில் சுதந்திரக் கட்சி அரசுடன் பேச்சை முன்னெடுக்க முடியும். விரும்பினால் அரசுடன் ஒன்றிணைந்து செயற்பட முடியும், விரும்பாவிடின் அரசில் இருந்து தாராளமாக வெளியேற முடியும். எவரும் தடை விதிக்கவில்லை. இருப்பதாலும், வெளியேறுவதாலும் எவ்வித மாற்றமும் ஏற்படாது. ஏனெனில் சுதந்திரக் கட்சியின் குறைந்த பட்ச உறுப்பினர்களே நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகிக்கிறார்கள்.

அரசில் இருந்துகொண்டு அரசுக்கு எதிராகச் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறியே அரசுக்கு எதிராகப் போராடினோம். அதனைப் போன்று சுதந்திரக் கட்சியும் அரசில் இருந்து வெளியேறிப் போராடலாம் – என்றார்.

---

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 49,259 பேர் கைது

கொரோனாத் தடுப்புத் தனிமைப் படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச் சாட்டில் மேலும் 214 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரை 49 ஆயிரத்து 259 பேர் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---

## அமைச்சுப் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
யாருக்காவது வழங்குவதற்குத் தீர்மானித்தால் அதற்கு நான் தயார்.

ஏனெனில் நான் அமைச்சுப் பதவியுடன் அரசுக்கு வரவில்லை. அதனால் எப்போதுவேண்டுமானாலும் அதனை வழங்கிவிட்டுத்தான் செல்லவேண்டும். நான் செய்த நன்மைகளைத் தவிர வேறு எதனையும் எடுத்துக்கொண்டு செல்ல முடியாது.

எரிபொருள்களின் விலை அதிகரிக்க அரசு தீர்மானிக்கவில்லை. நான் அமைச்சரவைக்குத் தெரிவித்ததால்தான் விலை அதிகரிப்பு இடம்பெற்றது என அரசில் இருந்து யாரும் தெரிவித்ததாக எனக்குத் தெரியாது.

அவ்வாறு யாரும் தெரிவித்திருந்தால், அதுதொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனெனில் அரசை வழிநடத்துவது நான் அல்ல. மாறாக ஜனாதிபதியும் அமைச்சரவையுமாகும் என்றே இதுவரை நான் நினைத்துக்கொண்டிருக்கின்றேன்.

ஐக்கிய மக்கள் சக்தி எனக்கு எதிராக கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம்கொடுக்க நான் தயாராகவே இருக்கின்றேன்.

பசில் ராஜபக்ஷ எனக்கு ஆதரவாக வாக்களிப்பாரா? இல்லையா? என்ற நம்பிக்கையில்லாத எதிர்கால விடயங்கள் தொடர்பில் எனக்குத் தெரியாது.

எனினும், எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறுமா? இல்லையா? என்பதை எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை இடம்பெறும் வாக்கெடுப்பில் தெரியவரும். அதுவரை சற்று பொறுமையாக இருங்கள் – என்றார்.

# மேலும் சில அரசியல் கைதிகளை அரசு விடுவிக்கத் தயாராகவுள்ளது



எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் மேலும் சில அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் தாயாராக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

குறித்த சந்திப்பு தொடர்பாக ஊடகங்களில் கருத்துத் தெரிவிக்கும்போதே சுரேன் ராகவன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அரசியல் கைதிகள் விவகாரத்தில் நாம் எடுத்த முயற்சியின் காரணமாகவே 16 கைதிகள் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் மேலும் சில அரசியல் கைதிகளை எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் விடுதலை செய்வதற்குத் தாயாராக இருக்கிறோம்.

அத்துடன் அவர்கள் செய்தது, அரசுக்கோ அல்லது நீதிக்கோ பிழையாக இருக்கலாம். ஆனாலும் போர் முடிந்து 11 வருடங்களுக்கு பின்னர் பொது மன்னிப்பு கொடுத்து அவர்கள் வாழ வழிவிடப்படவேண்டும் என்பதே எனது எண்ணம்.

இதேவேளை காணாமல் போனோர் தொடர்பாக நாடாளுமன்றத்தில் புதிய சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியா பொதுச் சந்தையில் 112 பேருக்கு பி.சி.ஆர். சோதனை

வவுனியா பொதுச் சந்தையில் 112 பேருக்கு கடந்த சனிக்கிழமை சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பொது சந்தையில் கடந்த வாரம் சிலருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து அந்தப் பகுதியில் சில வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் கொவிட் பரவலைத் தடுக்கும் வகையில் வவுனியா பொதுச் சந்தை கட்டடத் தொகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் அதில் கடமையாற்றுவோர் என 112 பேருக்கு சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், குறித்த பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (100)

## கிளிநொச்சியில் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

கிளிநொச்சி ஏ 9 நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில், குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில், கிளிநொச்சி – உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த பாஸ்கரலிங்கம் பிரசன்னா (வயது 30) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே படுகாயம் அடைந்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த டிப்பர் ரக வாகனத்தை அதே திசையில் பயணித்த மற்றொரு டிப்பர் வாகனம் முந்திச் செல்ல முற்பட்ட வேளையில், எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

குறித்த விபத்தில் படுகாயமடைந்தவர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஹஜ் பெரு நாளைக் கொண்டாட ஜூலை 21 ஆம் திகதி தீர்மானம்

இலங்கை வாழ் இஸ்லாமியர்கள் புனித ஹஜ் பெருநாளை ஜூலை மாதம் 21 ஆம் திகதி அனுஷ்டிப்பார்கள் என கொழும்பு பெரிய பள்ளிவாசல் தெரிவித்துள்ளது.

புனித துல் ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறை தென்படாமை காரணமாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

## டெல்டாவை விடவும் ஆபத்தான லெம்டா வைரஸ் இலங்கையில்

இலங்கையில் லெம்டா கொவிட் மாறுபாடு பரவியுள்ளதா என ஆராயும் நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெல்டா மாறுபாட்டை விடவும் மிகவும் ஆபத்தான லெம்டா மாறுபாடு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இலங்கை வரும் நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அருகில் அவ்வாறான ஆபத்துக்கள் உள்ளதென பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சில மாவட்டங்களுக்கு அபாய எச்சரிக்கை நீடிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு, கண்டி, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையே இவ்வாறு தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் களு, களனி, கின், நில்வள கங்கைகளை அண்மித்த மற்றும் இருமருங்கிலும் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.கங்கைகளை அண்மித்த வீதிகளில் பயணிக்கும் வாகனச் சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களை செலுத்த வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் பாடசாலை சமூகத்தினர் 3,025 பேருக்கு 12 ஆம் திகதி தடுப்பூசிகள்

வவுனியா மாவட்டத்தில் பாடசாலையில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள் உட்பட 3 ஆயிரத்து 25 பேருக்கு கொவிட் தடுப்பூசிகள் வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்படவுள்ளமையுடன், வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 802 ஆசிரியர்களும், 205 அதிபர்களும், 198 பாடசாலை மற்றும் வலயத்தில் பணியாற்றும் ஏனைய ஊழியர்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில் வவுனியா வடக்கு வலயத்தில் நெடுங்கேணி பகுதியில் 358 பேரும், ஓமந்தை பகுதியில் 926 பேருக்கும், வவுனியா தெற்கு வலயத்தில் தெற்கு சிங்களப் பிரிவில் 383 பேருக்கும், தெற்கு தமிழ் பிரிவில் 1,419 பேருக்கும், வெண்கல செட்டிகுளம் பிரிவில் 477 பேருக்குமாக 2,279 பேருக்கும் என மொத்தமாக 3,205 பேருக்கு கொவிட் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (100)

## புதிய களனி பாலத்தின் நிர்மானப்பணி நிறைவு

இலங்கையின் முதலாவது அதி உயர் தொழிநுட்ப கேபல்களின் ஊடாக அமைக்கப் பெற்றுள்ள களனிய பாலத்தின் கொங்கிறீட் பாலத்தின் நிர்மானப்பணி நிறைவடைந்து அதனை இணைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## கட்டடம் உடைந்து வீழ்ந்தது வெள்ளவத்தையில் ஒருவர் சாவு



வெள்ளவத்த, சுவிசுந்தாராம வீதியில் நிர்மாணப் பணியில் இருந்த கட்டடம் ஒன்றின் ஒரு பகுதி வீதியில் இருந்த மோட்டார் வாகனம் ஒன்றின் மீது உடைந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் வாகனத்தின் ஓட்டுநர் ஆசனத்தில் இருந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடுவலை பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வெள்ளவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹெரோயின் போதையுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

மாரவில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெப்பன்பொல பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை சிலாபம் பிரதேச போதை ஒழிப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாரவில பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே சிலாபம் பிரதேச போதை ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 139 கிராம் 120 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மாரவில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பில் மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கட்டுப்பாட்டை மீறி கொழும்புக்கு நுழைய முற்பட்ட பஸ் சாரதி கைது

மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாட்டை மீறி கொழும்புக்குள் நுழைய முற்பட்ட பஸ் ஒன்றின் சாரதி வெள்ளவத்தையில் கைது செய்யப் பட்டுள்ளார்.

மாத்தறை - ஊருபொக்க பகுதியில் இருந்து பிரவேசித்த பஸ்ஸின் சாரதியே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

சாரதி கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் பஸ்ஸில் இரண்டு பயணிகள் மாத்திரமே இருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைதான சாரதி பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரசாயன உரங்கள் இறக்குமதி செய்யும் தீர்மானம் எதுவுமில்லை

இரசாயன உர இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. மேலும் எதிர்காலத்திலும் இரசாயன உரங்களை இறக்குமதிசெய்யும்தீர்மானம் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீண்டும் சமரச முயற்சி?

நாட்டின் மிக மிக நெருக்கமான கால கட்டத்தில் – பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்திருக்கையில் – நாட்டின் நிதி அமைச்சராகப் பதவியேற்றிருக்கின்றார் பஸில் ராஜபக்ஷ.

நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்புக் கரைந்து கஜானா காலியான நிலைமை. ரூபாவின் மதிப்பு சரித்திரத்தில் இல்லாத பெருவீழ்ச்சியைக் கண்டுள்ளது. பங்குச் சந்தை வர்த்தகம் படுத்துவிட்டது. கொவிட் தொற்றுப் பேரிடர் நாட்டின் பொருளாதாரத்தையே சரித்து விட்டது. ஆயிரக்கணக்கானோர் தொழில் இழந்து, வருமானமில்லாமல் பட்டினி கிடக்கும் நிலைமை. சிறிய, பெரிய, நடுத்தர என எல்லாத் தொழில்துறைகளும் வேறுபாடின்றி கட்டையில் ஏறும் இக்கட்டு.

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் இலங்கை சர்வதேச நியமங்களைக் கடைப்பிடிக்காமையால் – கடைப்பிடிக்க மறுக்கின்றமையால் – இலங்கைக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை நிறுத்தப் போவதான எச்சரிக்கை அலாரத்தை ஒலித்து, ஐரோப்பிய ஒன்றியம் முன்னறிவித்தல் தந்து விட்டது. அதுவும் நிற்குமானால் ஆடை உற்பத்தி தொழிற்சாலைகள், கடலுணவு உற்பத்தி ஏற்றுமதி எல்லாம் முடங்கும். நாட்டுக்குக் கிடைத்து வந்த கொஞ்ச நஞ்ச அந்நிய செலாவணி ஈட்டலும் நழுவி விடும். நாட்டின் நிலைமை அதோகதியாகி விடும்.

ஏற்கனவே சர்வதேச நாடுகளிடம் பட்ட பல லட்சம் கோடி ரூபா கடனுக்கான நிலுவைத் தொகைகளை – தவணைக் கட்டணங்களை – செலுத்த முடியாமல் தடுமாறும் அரசு, புதிய, புதிய கடன்களைப் பெற்று, அவற்றின் மூலம் தவணைக் கட்டணங்களைச் செலுத்துகின்றது. இதனால் கடன்தொகை பார்த்திருக்க சந்திர மண்டல உயரத்துக்கு விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருக்கின்றது.

இதற்கிடையில் –

இன்னும் இரண்டு மாத காலத்தில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அடுத்த கூட்டத் தொடரில் இலங்கை விடயம் முக்கியமாக எடுக்கப்படவிருக்கின்றது.

மனித உரிமைகளைப் பேணும் விவகாரத்தை ஒட்டி இலங்கை அரசு காத்திரமான பிரதிபலிப்புகளை இந்தக் கால அவகாசத்துக்குள் காட்டாவிட்டால், இம்முறை ஜெனிவா அமர்வும் அதைத் தொடர்ந்து நடைபெறக் கூடிய சங்கதிகளும் கடும் விளைவுகளைத் தருவனவாக இருக்கும் என்பதை கோட்டா அரசு உணர்ந்திருப்பதாக கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் கருத்து வெளியிடுகின்றன.

இந்தப் பின்புலத்தில்தான் இப்போது அரசுக்குள் மிக சக்தி வாய்ந்த பதவிக்கு – ஜனாதிபதிக்கு அடுத்து பிரதமர் அளவுக்கு முக்கியத்துவமும், வலிமையும் மிக்கவரான ஒரு பதவிக்கு – வந்திருக்கின்றார் பஸில் ராஜபக்ஷ.

தமிழர் தரப்புடன் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் – தாம் ஆரம்பிக்கவிருந்த நேரடிப் பேச்சை கடைசி நேரத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒத்திவைத்தமை கூட, அமெரிக்காவிலிருந்து பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பி, புதிய பதவியை ஏற்பதற்காகத்தான் என்று கொழும்பில் சில நம்பிக்கைக்குரிய செய்தி வட்டாரங்கள் கோடி காட்டியிருக்கின்றன.

அதுதான் உண்மை என்றால், இனிமேல் தாமதமின்றி அந்தப் பேச்சுகள் ஆரம்பமாக வாய்ப்புகள் உண்டு.

வரும் செப்ரெம்பர் ஜெனிவா அமர்வுக்கு முன்னர் நல்லிணக்க உருவாக்க முயற்சியில் காத்திரமான பெறுபேறு எதனையும் வெளிப்படுத்துவதற்கு கொழும்பு ஆட்சித் தலைமை விரும்புமானால், இப்போதே தாமதமாகி விட்டது என்ற நிலைமையில், மேலும் காலதாமதம் செய்யாமல் தமிழர் தரப்புடனான நேரடிப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

அதற்கு முன்னர் பேச்சுக்கான களச் சூழலையும் கூட மாற்ற வேண்டியிருக்கும்.

தமிழர் பிரதேசத்தில் ஆட்சித் தரப்பின் கெடுபிடிப்போக்கு தளர்த்தப்பட வேண்டும். அரச அதிகார மட்டத்திலும் கூட – அதிகாரிகள் மட்டத்திலும் கூட – மாற்றங்கள், புதிய நியமனங்கள் இடம்பெற வேண்டியிருக்கும். அத்தகைய நிலைமையைப் பேணுகின்ற மாற்றங்கள் நடக்கும்.

எது, எப்படி என்றாலும் வரும் ஜெனிவா அமர்வுக்கு முன்னர், தனக்குள்ள நெருக்குவாரங்கள், தலைமிடிகள், அழுத்தங்கள், கழுத்தை நெரிக்கும் இக்கட்டுகளை அரசு தணிவிக்க வேண்டுமாயின் அது விரைந்தும், யதார்த்தபூர்வமாகச் சிந்தித்தும் செயற்படுவது மிகமிக அவசியமாகும்.

# தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கை முன்னெடுப்பு

### விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன தெரிவிப்பு



நாட்டில் எதிர்வரும் வாரத்தில் கொரோனா வைரஸுக்கான தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன தெரிவித்தார்.

எதிர்பார்த்தபடி சீனாவில் இருந்து 20 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் நேற்றுக் காலை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன.

இதேபோன்று மேலும் கொவேக்ஸ் திட்டத்தின் கீழ் மற்றுமொரு தொகை தடுப்பூசிகள் இந்த மாதத்தின் 3ஆவது வாரத்தில் நாட்டுக்குக் கிடைக்கவிருப்பதாகவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதத்தை அண்மிக்கும் போது நாட்டில் 30 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி ஏற்றும் பணியை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என பிரசன்ன மேலும் கூறினார்.

# கதிர்காமம் கிரிவெஹரவில் சமய வழிபாடுகளில் பிரதமர்



கதிர்காமம் கிரிவெஹரவிற்கு விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டார்.

ருஹுணு மாகம் பத்துவே தலைமை சங்கநாயக்கர் கிரிவெஹர விகாராதிபதி கலாநிதி வணக்கத்திற்குரிய கொபவக தம்மிந்த தேரரிடம் நலன் விசாரித்த பிரதமர் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பிரதமர் மற்றும் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ உள்ளிட்டோர் கிரிவெஹர வழிபாட்டில் ஈடுபட்டனர்.

வணக்கத்திற்குரிய கொபவக தம்மிந்த தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் கிரிவெஹரவில் பிரித் பாராயணம் செய்து பிரதமரை ஆசீர்வதித்தனர்.

பிரதமருடனான சமய வழிபாட்டில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, ருஹுணு மஹா கதிர்காம ஆலயத்தின் பஸ்நாஹிர நிலமே டிஷான் விக்ரமரத்ன குணசேகர, முன்னாள் ஊவா மாகாண சபை உறுப்பினர் விமல் கலகம ஆராச்சி, கதிர்காமம் பிரதேச சபையின் தலைவர் சானக அமில் ரங்கன உள்ளிட்ட பிரதேச அரசியல்வாதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழர் வாழும் பகுதிகளில் கனடாவில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் காயம்

கனடா, ஸ்காபுரோவில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என ரொறன்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

மார்க்கம் வீதியின் மெக்னிகால் அவென்யூ பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை 4 மணியளவில் சம்பவம் இடம்பெற்ற நிலையில் பொலிஸாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கமைய அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காயமடைந்த நிலையில் ஒருவர் வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டார் என மருத்துவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர். எப்படியிருப்பினும் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

# திருட்டுக்கு வந்த நபரை அடித்துக்கொன்ற வீட்டார்

வத்தளை, எவரிவத்த பகுதியில் வீட்டிற்குத் திருட வந்த நபர் ஒருவர் வீட்டார் தாக்கியதில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் இருந்த இளைஞர்கள் இருவர் கிரிக்கெட் மட்டையால் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

32 வயதுடைய கெக்கிராவ பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# சீரற்ற வானிலை காரணமாக ஒருவர் சாவு; இருவர் காயம்

தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 6 மாவட்டங்களைச் சேர்ந்த 24 பிரதேச செயலகப் பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளன என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில், 1,403 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 777 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, காலி,கொழும்பு மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்கள் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளன என மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.



கண்டியில் உள்ள நாவலப்பிட்டி பகுதியில் உள்ள 7 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 256 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் நுவரெலியா, அம்பகமுவ பிளாக்வாட்டர் மற்றும் நோர்டன் பகுதிகளில் 35 வீடுகளில் வசிப்பவர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 11

1978 இல் பயங்கரவாதத் தடை (சிறப்பு ஏற்பாடுகள்) தற்காலிகச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தவர் ஒரு தமிழர். நீதி அமைச்சராக இருந்த கே.டபிள்யூ. தேவநாயகம். எங்கள் விரலைக் கொண்டே எங்கள் கண்களைக் குத்த கிழட்டு நரி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா செய்த தந்திரம் இது.

தனித் தமிழீழ முடிவை அறிவித்து, வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு 1977 இல் தமிழ் மக்களின் ஆணையைக் கேட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, கல்குடாத் தொகுதியைக் கோட்டை விட்டது. அங்கிருந்துதான் ஐ.தே. கட்சியில் தெரிவானார் இந்த தேவநாயகம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதி ஒருவர் ஏ.எஸ்.பி. தரத்துக்கு மேற்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அவருக்கு எதிரான சான்றாதாரமாக நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளலாம் என்று இந்தச் சட்டம் வலியுறுத்துகின்றது. இந்த வாக்குமூலம் பலவந்தத்தின் பெயரில், சித்திரவதை செய்யப்பட்டு பெறப்பட்டது என்று கைதி சார்பில் நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்பட்டால், அப்படி அது சித்திரவதை செய்யப்பட்டு பெறப்பட்டது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு **(Burden of proof)** கைதியைச் சார்ந்தது என எதிர்பார்க்கின்றது அந்தச் சட்டம். அரச தடுப்புக் காவலில் கைதி சித்திரவதை செய்யப்பட்டமையை நிரூபிப்பதற்கு, சாட்சிகளை எங்கு தேடுவது? காவலுக்கு இருந்த பொலிஸாரோ, படையினரோ சாட்சி சொல்ல முன்வருவார்களா?


ஆகவே, சித்திரவதைகள் மூலம் தமிழ் இளைஞர்களின் வாழ்க்கையையே நாசமாக்கும் சட்ட மூலம் இது என்று அச்சட்ட மூலம் நாடாளுமன்றுக்கு வந்த சமயம் தமிழ்ப் பிரதிநிதிகள் – கூட்டமைப்பினர் – எடுத்துரைத்தனர்.

அதனால்தான் இந்தச் சட்டமூலத்தில் மரணதண்டனை சேர்க்கப்படவில்லை, ஆகக் கூடியது ஆயுள் தண்டனைதான் என்று பதிலளித்தார் நீதி அமைச்சர் தேவநாயகம்.

இந்த விடயத்தில் விசித்திரமான நிலையை ஏற்படுத்தியது கான்ஸ்டபிள் சிவநேசன் கொலைவழக்கு. கான்ஸ்டபிள் சிவநேசன் சுட்டுக் கொல்லப்பட்ட சமயத்தில் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரவில்லை. ஆனால் இந்த வழக்கின் சந்தேகநபர்கள் என்று கூறப்பட்ட குட்டிமணி, ஜெகன் மற்றும் கறுப்பன் ஆகியோர் கைது செய்யப்பட்ட சமயம் சட்டம் நடைமுறைக்கு வந்து விட்டது.

ஆக, இந்த வழக்கில் கொலை உட்பட பல குற்றச்சாட்டுகள் குட்டிமணி, ஜெகன், கறுப்பன் ஆகியோர் மீது வழமையான தண்டனைச் சட்டக் கோவையின் **(Penal Code)** கீழ் சுமத்தப்பட்டன. அந்தச் சட்டக் கோவையின் கீழ் கொலைக் குற்றத்துக்கு மரண தண்டனை விதிக்க முடியும்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அரச சட்டத்தரணியான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திலக் மாரப்பன பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஒரு பிரிவைத் தூக்கிப் போட்டார். இந்தச் சட்டம் நடைமுறைக்கு வர முன்னர் இடம்பெற்ற பயங்கரவாதச் சம்பவங்களையும் இந்தச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய முடியும் என்று அந்தச் சட்டப் பிரிவு கூறியது. (விசாரணை செய்ய முடியும் என்று கூறியதே தவிர, அத்தகைய சம்பவங்களை இந்தச் சட்டத்தின் கீழ் விசாரித்தால் இந்தச் சட்டத்தின் கீழேயேதான் தண்டிக்கப்பட வேண்டும் என்று அது தெளிவுபடுத்தவில்லை.)



இந்தியாவில் ஆர்.எம்.வீரப்பன் மற்றும் சொல்லின் செல்வர் இராஜதுரையுடன் எஸ்.டி.எஸ்.

அரச தரப்பின் கோரிக்கையை ஏற்று வழக்கை பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் விசாரிக்க ஒப்புக் கொண்டது கொழும்பு விசேட மேல் நீதிமன்றம். அந்தச் சட்டத்தின் கீழ் கைதிகள் மூவரும் (குட்டிமணி, ஜெகன், கறுப்பன்) வழங்கிய வாக்குமூலங்களை எதிரிகளுக்கு எதிரான சான்றாதாரங்களாக ஏற்பதை எதிரிகள் தரப்பு சட்டத்தரணி சிவசிதம்பரமும் உருத்திர மூர்த்தியும் கடுமையாக ஆட்சேபித்தனர்.



எஸ்.டி.சிவநாயகம் 'சுதந்திரன்' பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றிய கால கட்டத்தில் அவரைப் பற்றி சிலாகித்து 'கல்கி' ஆசிரியர் ரா.கிருஷ்ணமூர்த்தி 17.09.1950 திகதிய 'கல்கி' இதழில் எழுதிய கட்டுரையில் வெளியான சிவநாயகம் ஐயாவின் இளமைத் தோற்றம்.

ஆக, அந்த வாக்குமூலங்களை ஏற்பதா, இல்லையா என்ற தனியான விசாரணையை 'வொயர் டொயர்'(விசாரணைக்குள் விசாரணை) கொழும்பு மேல் நீதிமன்றம் ஆரம்பித்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் முதலாவது 'வொயர் டொயர்' விசாரணை அது. அந்த விசாரணையில் குற்றத்தை சுமத்துவோர் எதிரி தரப்பு. குற்றச்சாட்டு அரசுத் தரப்புக்கு எதிரானது. நிரூபிக்கும் பொறுப்பு வழமைக்கு மாறாக எதிரி தரப்பிடம்.

இதைப் பற்றி எல்லாம் விளக்கமான – விவரமான – செய்திகள், கட்டுரைகளை நான் தினபதியில் வரைந்தேன். ஆசிரியர் சிவநாயகம், துணை ஆசிரியர் இரத்தினசிங்கம், செய்தி ஆசிரியர் கானமயிலநாதன் போன்றோர் என்னை ஊக்குவித்தனர். இந்தச் செய்திகளில் விசேட கவனம் எடுத்து அவற்றை 'எடிட்' செய்தனர். அழகான – கவர்ச்சியான – தலைப்புகள் இட்டனர். முக்கியத்துவம் கொடுத்தனர். செய்திகளில் பிழை போகக் கூடாது என்பதற்காக அவை குறித்து என்னைக் கேள்விகள் கேட்டுத் துளைத்தெடுத்தனர்.

வழக்கின் இறுதிக் கட்டத்தில் எதிரிகள் மூவரும் தடுப்புக் காவலில் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் சுயாதீனமாக வழங்கப்படவில்லை, வல்வந்தமாகப் பெறப்பட்டவை என்ற குற்றச்சாட்டை எதிரி தரப்பு சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கத் தவறி விட்டதால் அவற்றை எதிரிகளுக்கு எதிரான சான்றாதாரங்களாக ஏற்க நீதிபதி முடிவு செய்தார் .

அதனை அடுத்தே தீர்ப்பு வழங்க வேண்டிய சமயத்தில் அந்த சட்ட வாதம் வெடித்தது.

அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்பட்ட வழக்கில் எதிரிகள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால், அவர்களுக்குரிய தண்டனையை அந்தச் சட்டத்தின் கீழ் விதிப்பதா? அல்லது குற்றப் பத்திரத்தில் குற்றம் சுமத்தப்பட்ட தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் விதிப்பதா – என்ற சட்டச் சர்ச்சைதான் அது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் என்றால் ஆகக் கூடியது ஆயுள் தண்டனைதான். அப்படி இல்லாமல், தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் என்றால் மரண தண்டனை வரைப் போகலாம்.

இரு பக்க சட்டத்தரணிகளும் வாதம் செய்தனர். இந்தச் சட்டம் – பயங்கரவாதத் தடைச் சட்டம் – நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்பட்ட போது அரசின் சார்பில் நீதி அமைச்சர் தேவநாயகம் ஆற்றிய உரையை ஹன்சார்ட் பிரதியோடு நீதிமன்றில் தூக்கிப் போட்டார் சிவசிதம்பரம்.

நீதிமன்றம் வெறுமனே சட்டச் சொல்லாடல்களை மட்டும் கவனித்துத் தீர்ப்புக் கொடுக்கக் கூடாது. தண்டனை வழங்கக் கூடாது. சட்டம் கொண்டு வரப்பட்ட நோக்கத்தையும் பார்க்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் தவறு இருப்பதால் தான் அதில் மரண தண்டனை இல்லை என்பதை சட்டத்தைக் கொண்டு வந்த அரசின் சார்பில் நீதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றார். அதை நீதிமன்றம் புறம்தள்ளி, இந்த வழக்கை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரித்து, அதனடிப்படையில் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்ட பின்னர் அந்தச் சட்டத்தைத் தவிர்த்து, சாதாரண தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் தண்டனை வழங்கக் கூடாது, தண்டனை வழங்க முடியாது என்று ஒரு நீண்ட வாதத்தை தமது கர்ஜித்த சிம்மக் குரலில் சிவசிதம்பரம் முழங்கி, அமர்ந்தார். அந்த வாதம் 39 ஆண்டுகள் கடந்தும் இன்னும் என் காதுகளில் எதிரொலிக்கின்றது.

சிவசிதம்பரத்தின் அந்த கர்ஜிப்பை அடுத்து நிலைமை எதிரிகளுக்கு சாதகமாகியிருக்கும், தீர்ப்பு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தாண்டிப் போகாது என்ற முழு நம்பிக்கையுடன் நீதிமன்றத்திலிருந்து புறப்பட்டனர் எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகள்.

ஓரிரு வாரங்கள் சென்றிருக்கும். ஒரு வியாழக்கிழமை பிற்பகல் வெள்ளவத்தையில் எனக்குக் கிடைத்த ஒரு தகவலை அடுத்து நான் ஹல்ஸ்டோர்பில் இருந்த எமது அலுவலகத்துக்கு விரைந்தேன். பல இடங்களுக்கும் தொலைபேசி அழைப்பு எடுத்து, கடைசியில் ஒருவாறு சட்டத்தரணி நவரத்தினத்தை (கரிகாலனை) பிடித்தேன்.

*"அண்ணை, நான் வித்தி. குட்டிமணி வழக்கில் நாளை தீர்ப்பாம்"* என்றேன்.

*"எனக்குத் தெரியும். சிவா அண்ணையும் (சிவசிதம்பரம்) நாளைக்குக் கோர்ட்டுக்கு வருவார்"* என்றார் அவர்.

*"தீர்ப்பு என்ன எண்டு தெரியுமோ...?"* என்று கேட்டேன்.

அவர் நக்கல் சிரிப்பு சிரித்தார். *"அது எப்படியடா எனக்குத் தெரியும்? நாளைக்கு நீதிபதி சொன்னாத் தான் தெரியும்...!"* என்றார் அவர்.

*"இல்லை அண்ணே. எனக்கு அது தெரியும். அது தான் உங்களை 'அலேர்ட்' செய்ய இப்ப உங்களைத் தேடிப் பிடிச்சனான். தூக்குத் தண்டனைதான் தீர்ப்பு...!"* என்றேன் நான்.

*"அப்படியா...?"* என்று கேட்டு ஒரு கணம் அவர் விக்கித்துப் போனார்.

அந்தத் தீர்ப்பு எப்படி எனக்குத் தெரிய வந்தது என்ற விவரத்தையும் அவருக்குத் தெரியப்படுத்தினேன்.

*"நான் சிவா அண்ணனிடம் பேசுகிறேன்"* என்று கூறித் தொலைபேசியைத் துண்டித்தார்.

ஒரு பத்து நிமிடம் கழித்து சிவசிதம்பரம் எம்.பியிடமிருந்து அலுவலகத்துக்கு எனக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. அவரே பேசினார். விடயங்களைக் கேட்டு அறிந்து உறுதிப்படுத்தினார்.

*"கரிகாலனை வெலிக்கடைக்கு அனுப்பிறன். குட்டிமணி, ஜெகனைத் தயார்படுத்துவதற்கு..."* என்றார் சிவசிதம்பரம் எம்.பி.

இருட்டுவதற்கு முன்னர் வெலிக்கடைக்குச் சென்று எப்படியோ குட்டிமணி, ஜெகனைச் சந்தித்தார் கரிகாலன். அடுத்த நாள் தீர்ப்பை அடுத்துச் செய்ய வேண்டியவற்றை அவர்களுக்குத் தெளிவுபடுத்தினார் கரிகாலன்.

நான் ஆசிரியர் சிவநாயகம் ஐயாவிடம் விரைந்தேன். விடயங்களை எடுத்துரைத்தேன். உறுதியாகத் தீர்ப்பு இதுதான் என்றேன்.

*"அப்படியா?"* என்று கேட்ட அவர், தீர்ப்பு நீதிமன்றில் வாசிக்கும் வரை விடயத்தை பிரசுரிக்கக் கூடாது என்றார். அதனால் செய்தியை நான் எழுதவில்லை.

ஆனால், பிறிதொரு சந்தர்ப்பத்தில் உயர்நீதிமன்றத்தின் அரசமைப்பு விவகார விசாரணைத் தீர்ப்பு ஒன்றை நான் நேரத்துடன் 'களவெடுத்து' கொண்டு வந்து, பிரசுரிக்க வழிப்படுத்திய சிவநாயகம் ஐயா, அது பற்றிய விடயம் நாடாளுமன்றத்திலேயே பெரிய சிக்கலாக மாறுமோ என்று நான் நடுங்கிய சமயத்தில், எனக்குத் தெம்பும், தைரியமும் தந்து காவலரணாக நின்றார். அவர் கூறியபடி சூரியனைக் கண்ட பனி போல அந்த விவகாரம் சிக்கலாக வராமல் விலகியது. அது பற்றிய விடயத்தையும் இந்தத் தொடரில் விவரிப்பேன்.

சரி. குட்டிமணிக்கும், ஜெகனுக்கும் தூக்குத் தண்டனைதான் என்ற தீர்ப்பு முதல் நாள் மாலையில் எனக்குத் தெரிய வந்தது எப்படி?

விவரம் நாளை பார்ப்போமா? **(வளரும்)**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி – 2021


தரம் - 07 | விஞ்ஞானம் | அலகு 09

## ஒளி

### 9.1 நிழல் உண்டாதல்

* ஒளி செல்லும் பாதையில் ஒளிபுகாத பொருள் ஒன்றை வைக்கையில் நிழல் உருவாகும்.
* பொருள் ஒன்றின் மீது சூரிய ஒளி படும் அளவு, திசை என்பவற்றிற்கேற்றவாறு நிழலின் திசையும், நீளமும் வேறுபடுகின்றது.
* கைகள் மற்றும் விரல்களின் நிழல்கள் மூலம் பல்வேறு உருவங்களை ஆக்கலாம்.

**கீழேயுள்ள படத்தினை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**



A. ஒளிபுகவிடும் கண்ணாடி
B. பகுதி ஒளிபுகவிடும் கண்ணாடி
C. காட்போட் மட்டை


**படத்திலுள்ளவாறு வெவ்வேறு வகையான ஒளிபுகவிடும், ஒளிபுகவிடாத அட்டைகளினூடாக ஒளிக்கற்றை செலுத்தப்பட்டு அதன் பாதையில் ஒளிபுகவிடாத பொருள் ஒன்று வைக்கப்பட்டது.**

1. தெளிவான நிழல் பெறப்பட்ட பரிசோதனை அமைப்பு எது?
........................................................................................................
2. அதற்கான காரணம் யாது?
........................................................................................................
3. தெளிவற்ற நிழல் பெறப்பட்ட பரிசோதனை அமைப்பு யாது?
........................................................................................................
4. நிழல் பெறப்படாத பரிசோதனை அமைப்பு யாது?
........................................................................................................
5. அதற்கான காரணம் யாது?
........................................................................................................
6. நிழலின் திசையும் நீளமும் எதன் அடிப்படையில் வேறுபடும்?
........................................................................................................
7. பண்டைய காலத்தில் நிழலின் நீளம் எதனை அளவிடுவதற்கு பயன்பட்டது?
........................................................................................................
8. அவ் உபகரணத்தின் பெயர் யாது?
........................................................................................................
9. நிழல் தோன்றுவதற்கான காரணம் யாது?
........................................................................................................

### நிழலின் பகுதிகளை அவதானித்தல்

* பொருள் ஒளிமுதல் என்பன மிக அருகே இருக்கையில் திரை மீது விழும் நிழல் தெளிவற்றதாகக் காணப்படும். இங்கு நிழலைச் சுற்றி மேலும் ஒரு நிழற் பிரதேசத்தை அவதானிக்கலாம்.
* பொருள், ஒளிமுதல் என்பவற்றிற்கிடையிலான தூரம் அதிகரிக்கையில் துணை நிழலான நிறைவணுகு நிழல் படிப்படியாக மறைந்து செல்லும். கருநிழலை தெளிவாக அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.
* எனவே தெளிவான நிழல் ஒன்றைப் பெறுவதற்கு ஒளிமுதலானது பொருளில் இருந்து தூரத்தில் இருக்க வேண்டும்.

**கீழேயுள்ள படத்தினை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**





படத்திலுள்ளவாறு மின்சூள் ஒன்று பொலித்தீன் தாளால் சுற்றிக் கட்டப்பட்டு மேல் அரைப்பங்கு சிவப்பு நிறத்தாளும், கீழ் அரைப்பங்கானது நீல நிறத்தாளும் நிறமூட்டப்பட்டது.

பின்னர் மின்சூளானது ஒளிரச்செய்யப்பட்டு ஒளிக் கற்றை செல்லும் பாதையில் பந்து ஒன்று வைக்கப்பட்டது.

10. மேற்படி செயற்பாடு நிழலின் எப்பகுதிகளை அவதானிக்க மேற்கொள்ளப்பட்டது?
........................................................................................................
11. அதன் மேற்புறப் பகுதி எந்நிறத்தில் தென்படும்?
........................................................................................................
12. அதன் கீழ்ப் பகுதி எந்நிறத்தில் தென்படும்?
........................................................................................................
13. நடுப் பகுதியில் காணப்படும் நிழல் எது?
........................................................................................................
14. மேற்படி நிழல் தோன்றியமைக்கான காரணம் யாது?
........................................................................................................
15. நிறைவணுகு நிழல் தோன்றுவதற்கான காரணம் யாது?
........................................................................................................

### நிழல்கள் தோன்றுவதன் காரணமாக ஏற்படும் தோற்றப்பாடுகள்

**அ) சந்திர கிரகணம்**





**மேலேயுள்ள படத்தினை அவதானித்து இடைவெளிகளுக்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

16. சூரியன், புவி, சந்திரன் என்பன ஒரே நேர்கோட்டில் அமைகையில் அதாவது சூரியன், சந்திரன் என்பவற்றுக்கிடையில் ................ (சூரியன் / புவி) வரும்போது புவியின் நிழல் சந்திரன் மீது விழுவதனால் .................... தோன்றும்.

17. சந்திர கிரகணம் .................... (அமாவாசை / பௌர்ணமி) தினத்தில் இரவில் ஏற்படும்.

**ஆ) சூரிய கிரகணம்**





மேலேயுள்ள படத்தினை அவதானித்து இடைவெளிகளுக்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

18. சூரியன், புவி என்பவற்றுக்கிடையில் சந்திரன் ஒரே நேர்கோட்டில் அமைகையில் சந்திரனின் நிழல் ................ (புவியின் / சூரியனின்) மீது விழுவதனால் .............. (சந்திரன் / புவி) தென்படாத தோற்றப்பாடு சூரிய கிரகணம் எனப்படும்.
19. சூரிய கிரகணம் ................. (அமாவாசை / பௌர்ணமி) நாளில் .............. (பகலில் / இரவில்) தோன்றும்.

### 9.2 தளவாடியில் பெறப்படும் விம்பங்கள்


**ஒளித்தெறிப்பு**



இடைவெளிகளுக்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.


1. யாதேனும் ஒரு ஊடகத்தினூடாகச் செல்லும் ஒளிக்கற்றை தளமேற்பரப்பு ஒன்றின் மீது பட்டு அதே ஊடகத்தினூடாக வேறொரு திசையில் ....................(திரும்பி / வளைந்து) செல்லுதல் ஒளித்தெறிப்பு எனப்படும்.
2.. .................... (அழுத்தமான / அழுத்தமற்ற) மேற்பரப்புக்களில் ஒளி நன்கு தெறிப்படைகின்றது.
3. ஒப்பமான மேற்பரப்பு.................... (ஆடியாக/வில்லையாக) தொழிற்படுகின்றது.
4. ஒளி தெறிப்படைவதனால் ஆடிகளில் இருந்து .................... (விம்பங்களை / நிழல்களை) பெற்றுக் கொள்ளலாம்.

**தளவாடியில் தோன்றும் விம்பங்கள்**




* திரையில் பெறக்கூடிய விம்பம் - உண்மை விம்பம்.
* திரையில் பெற முடியாத விம்பம் - மாய விம்பம்.

**தளவாடியில் தோன்றும் விம்பத்தின் இயல்புகள்**




மேலேயுள்ள படத்தினை நன்கு அவதானித்து கீழுள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

5. திரையில் பெற ....................(முடியாது / முடியும்)
6. விம்பம் .................... (நிமிர்ந்தது / தலைகீழானது)
7. விம்பம் .................... (பொருளளவானது / சிறியது / பெரியது)
8. விம்பத்தில் வலம், இடம் மாறித் .................... (தென்படும் / தென்படாது)
9. விம்பம் ஆடியின் .................... (பின்னால் / முன்னால்) தோன்றும்
10. ஆடியில் இருந்து பொருள் உள்ள தூரம் ஆடியில் இருந்து விம்பம் உள்ள தூரத்திற்கு .................... (சமமற்றது / சமமானது)
11. பொருளையும் விம்பத்தையும் இணைக்கும் கற்பனைக் கோடு .................... (ஆடிக்கு / கிடைக்கு) செங்குத்தானது.

**பக்க நேர்மாறல்**



* தளவாடியில் யாதேனும் பொருளொன்றின் விம்பம் தோன்றும் போது வலம் இடமாக மாறித் தென்படுவது பக்க நேர்மாறல் எனப்படும்.

**பல்விம்பங்கள் தோன்றுதல்**

* தளவாடிகள் இரண்டு அல்லது அதற்குக் கூடிய எண்ணிக்கையில் பெற்று ஒன்றுக்கொன்று செங்குத்தாக அல்லது சமாந்தரமாக வைக்கப்படும் போது ஒன்றுக்கு மேற்பட்ட விம்பங்கள் தோன்றுகின்றன. இவை பல்விம்பங்கள் எனப்படும்.

உதாரணம் :- நகைக்கடை, ஐஸ்கிறீம் கடை

* இரு தளவாடிகளுக்கு இடையிலான கோணம் θ எனில் தோன்றும் விம்பங்களின் எண்ணிக்கை எனில்,
*

$$n = \frac{360}{\theta} - 01$$

* மேலேயுள்ள சமன்பாட்டினை உபயோகித்து கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள கோணங்களுக்குரிய விம்ப எண்ணிக்கைகளை காண்க.

| | தளவாடிகள் இரண்டிற்கும் இடைப்பட்ட கோணம் (பாகையில்) | தோன்றும் விம்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 12. | 0 | ..................... |
| 13. | 60 | ..................... |
| 14. | 45 | ..................... |
| 15. | 30 | ..................... |

(நாளை தொடரும்.....)

**இவ் வினாத்தாளின் விடைகள் நாளை பிரசுரமாகும்**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 11 | விஞ்ஞானம் | அலகு 04

## அலைகளும் அவற்றின் பயன்பாடுகளும்

### விடைகள்

**01)** a)

i) அலை இயக்கத்தில் ஊடகம் தேவைப்படும் / கடத்தப்படுவதற்கு ஊடகம் தேவைப்படும் அலைகள்.

ii) 2 வகைப்படும்
நெட்டாங்கு அலை, குறுக்கு அலை


iii) ஒரு அலையானது ஊடகத்துணிக்கை செல்லும் திசைக்கு செங்குத்தாக செல்லுமெனில் அவ் அலை குறுக்கு அலை எனப்படும்.

iv) ஒரு நெட்டாங்கு அலையின்போது அலை செல்லும் திசையும் ஊடகம் செல்லும் திசையும் ஒரே திசையாக காணப்படும்.

v) குறுக்கு அலை
1. அலை செல்லும் திசைக்கு செங்குத்தான திசையில் ஊடகத் துணிக்கைள் அசையும்.
2. முடிகளும் தாழிகளும் காணப்படும்.
3. திண்ம, திரவ மேற்பரப்பில் செல்லும்

நெட்டாங்கு அலை
1. இரண்டும் ஒரே திசையில் காணப்படும்
2. நெருக்கல், ஐதாக்கல் நிலையில் காணப்படும்
3. திண்ம, திரவ, வாயு மேற்பரப்பில் செல்லும் (ஏதேனும் 2)

b) i), ii)



iii) அலை இயக்கத்தில் பங்கு பெற்றும் ஒரு துணிக்கையில் இருந்து அதேவியக்க நிலையில் இருக்கும் மிகக்கிட்டிய மற்றைய துணிக்கைக்கு உள்ள தூரம் அலை நீளம் எனப்படும்.

iv) $V = f\lambda$ இங்கு அலை நீளம் $(\lambda)$ = அலையின் வேகம் (v) / அலையின் மீடிறன் (f)

$= \frac{3 \times 10^8 \text{ ms}^{-1}}{3 \times 10^{19} \text{ Hz}}$

$= 3 \times 10^{-11}$m

v) செலுத்துவதற்கு ஊடகம் அவசியம் இல்லை
வெற்றிடத்தில் $3 \times 10^8 \text{ ms}^{-1}$ கதியில் செல்லும்
புற மின் காந்தம் புலங்களினால் பாதிக்கப்படாது.

c) i)

| காமா கதிர்கள் | X கதிர்கள் |
|---|---|
| மீடிறன் ஆனது X கதிர்களைவிட அதிகம் | மீடிறன் ஆனது காமாக் கதிர்களைவிட குறைவு |
| கதிர்த் தொழிற்பாட்டு மூலகங்கள் மூலம் வெளிவிடப்படும் | உயர் கதி இலத்திரன்களை ஓர் உலோக இலக்கின் மீது மோதச் செய்வதன் மூலம் X கதிர்கள் உற்பத்தி செய்யப்படும். |

ii) * விமானப் பயனிகளின் பயணப்பைகளையும், கப்பல்களின் மூலம் பொருள்கள் கொண்டு செல்லப்படும் கொள்கலனைத் திறக்காமல் சோதிப்பதற்கு X கதிர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

* உடலின் உட்பகுதியை ஒளிப்படமெடுப்பதற்கு பயன்படும்.

iii) $4.28 \times 10^{14}$ Hz தொடக்கம் $7.69 \times 10^{14}$ Hz

iv) நுண் அலைக் கனலியினுள் வெளிவிடப்படும் நுண் அலைகள் வெளியே செல்லாமல் இருப்பதற்காக அலைகளைத் தடைசெய்யும் முகமாக நுண்அலைக் கனலி அமைக்கப்பட்டுள்ளது என்பதனால் தொலைபேசி அலைகள் நுண் அலைக் கனலியினுள் செல்லமுடியாது / ஊடுருவ முடியாது)
(இங்கு "நுண்ணலைக் கனலியினுள் அலைகள் ஊடுருவ முடியாது" எனும் கூற்று மட்டும் போதுமானது)

d)

i) நெட்டாங்கு அலை

ii) இல்லை. காரணம் - சூரியனிலிருந்து புவிக்கிடையில் வெற்றிடம் மட்டுமே உள்ளது. எனவே ஒலி அலை பயணிக்க ஊடகம் அல்லாததனால் சத்தத்தை புவியில் இருந்து உணரமுடியாது.

iii) வேகம் = தூரம் / நேரம்

but இங்கு அலை சென்று மீண்டும் வருவதனால் (தூரம் /2)
தூரம் = வேகம் X நேரம்
$= 4s \times 330 \text{ ms}^{-1}$
= 1320m
தூரம் = 1320m / 2 = 660m

iv) வேகம் ஆனது ஊடகத்துக்கமைய பின்வருமாறு ஏறுவரிசைப்படுத்தப்படும்.
திண்மம் > திரவம் > வாயு அல்லது வாயு < திரவம் < திண்மம்.

v) சுருதி, உரப்பு, ஒலியின் பண்பு

**02)** a) i) நோக்கம் - ஒலிச் செலுத்துகைக்கு ஊடகம் தேவை என்பதனைக் காட்டல்.
முடிவு - ஒலியானது வெற்றிடத்தினூடு செல்லாது.

ii) A - மின் மணி, B - வெற்றிடப்பம்பி, C - மணிச் சாடி

iii) படத்தில் காட்டியவாறு அமைப்பைப் பூரணப்படுத்தி மின் வழங்கலுடன் தொடுத்தல் வேண்டும். பின்பு மணிச் சாடியினுடன் வெற்றிடப்பம்பியைத் தொடுத்தல் வேண்டும். பின்பு வெற்றிடப் பம்பி மூலம் சாடியில் உள்ள வளியை சிறிது சிறிதாக அகற்றல் வேண்டும்.

iiv) இல்லை. காரணம் - ஒலியின் வேகம் வளியில் ஏறத்தாழ $330\text{ms}^{-1}$ ஆகும். ஆனால் ஒளியானது $3x\ 10^8 \text{ms}^{-1}$ வேகத்தில் செல்லும்.
எனவே முதலில் மின்னலையே அவதானிக்க முடியும்.


b) i) கட்புலனற்றோர் பயன்படுத்தும் கழியொலி மூக்குக் கண்ணாடிக்கு கழியொலி அலைகள் பயன்படுத்தப்படும்.
கழியொழி அலகிடலில் பயன்படும்., கர்ப்பிணித்தாயின் கருப்பையில் இருக்கும் சிசுவை அவதானித்தல்.

ii) உணர முடியாது. காரணம் மனிதக் காதின் கேள்தகு வீச்சு 20 Hz - 20000Hz ஆகும். ஆனால் கழியொழி அலை 20000Hz இற்கு அதிகம் என்பதனால் அவ் ஒலியை உணரமுடியாது.

iii) தூரம் = வேகம் X நேரம்
$= 1440\text{ms}^{-1} \times 10\text{s}$
= 14400m
but எதிரொலி இடைப்பட்ட தூரம் = 14400m/2
= 7200m அல்லது 7.2km

iv) மூன்று வகைப்படும்
1. நரம்பு / இழைக்கருவிகள்
2. கொட்டற் / தோல் கருவிகள்
3. காற்றுக் கருவிகள்

c)




iii) கட்புல ஒளி < கழியூதாக்கதிர்கள் < காமாக் கதிர்கள்

iv) மின்காந்த திரிசியத்தில் மீடிறன் அதிகரிக்கும் வரிசையில் அலைநீளம் குறைந்து செல்லும்.

d) i) ஒலியின் பண்பு.

ii) ஒரு உயிரினத்தால் / மனிதக் காதினால் உணரக்கூடிய ஒலியின் மீடிறன் வீச்சு கேள்தகு வீச்சு எனப்படும்.

iii) 20Hz - 20000Hz

iv) சுறா
வௌவால்

ஆக்கம் - வி.டினோஜன்

# நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

தரம் - 6 | கணிதம் | அலகு 12

## நேர்கோட்டுத் தளவுருக்கள் - விடைகள்

1.பின்வரும் தளவுருக்களில் மூடிய தளவுருக்கள், திறந்த தளவுருக்கள் எனத் தெரிந்தெடுத்து எழுதுக

| | |
|---|---|
| 1. மூடிய தளவுரு | 2. மூடிய தளவுரு |
| 3. திறந்த தளவுரு | 4. மூடிய தளவுரு |
| 5.திறந்த தளவுரு | 6. மூடிய தளவுரு |
| 7.மூடிய தளவுரு | 8. திறந்த தளவுரு |

2.பின்வரும் தளவுருக்களில் நேர்கோட்டுத் தளவுருக்களை இனங்காண்க

| | |
|---|---|
| 1.நேர்கோட்டுத் தளவுரு | 2.நேர்கோட்டுத் தளவுரு இல்லை |
| 3.நேர்கோட்டுத் தளவுரு | 4.நேர்கோட்டுத் தளவுரு இல்லை |
| 5.நேர்கோட்டுத் தளவுரு | 6.நேர்கோட்டுத் தளவுரு |
| 7.நேர்கோட்டுத் தளவுரு இல்லை | 8.நேர்கோட்டுத் தளவுரு |
| 9.நேர்கோட்டுத் தளவுரு இல்லை | 10.நேர்கோட்டுத் தளவுரு இல்லை |

3.பின்வரும் தளவுருக்களை இனங்கண்டு பெயரிடுக

| | |
|---|---|
| 1.சரிவகம் | 2.சதுரம் |
| 3.செவ்வகம் | 4.முக்கோணி |
| 5.சாய்சதுரம் | 6.இணைகரம் |
| 7.முக்கோணி | 8.இணைகரம் |
| 9.சரிவகம் | 10.செவ்வகம் |

**ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்**
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திருமதி சுதர்சினி விக்னமோகன்**
விரிவுரையாளர் யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# ஆசிய அபிவிருத்தி வங்கியால் 15 கோடி டொலர் கடனுதவி!

கொழும்பு, ஜூலை 12

கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இலங்கைக்கு 15 கோடி டொலர் கடனுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வளரும் உறுப்பு நாடுகளுக்கு தடுப்பூசி தொடர்பான ஆதரவை வழங்க டிசெம்பர் 2020இல் தொடங்கப்பட்ட ஆசிய பசுபிக் தடுப்பூசி அணுகல் வசதியின் ஒரு பகுதியாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

கொரோனாவில் இருந்து மக்களைப் பாதுகாக்கவும், பாதித்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையிலும் இந்தக் கடனுதவியை வழங்கத் தீர்மானித்துள்ளதாக வங்கியின் தலைவர் மசாட்சுகு அசகவா தெரிவித்துள்ளார்.

குறித்த கடன் ஒப்பந்தத்தில் திறைசேரியின் செயலாளர் எஸ். ஆர். அட்டிகலே மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

அங்கம் 63



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 186.விடுதலைப் புலிகள் அப்படியானால் டோக்கியோ தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளவில்லையா?

அவர்கள் ஆப்பிழுத்த குரங்கின் நிலையிலிருந்தார்கள். பேச்சுவார்த்தைகளை ஏற்றுக் கொண்டு போனபின் நடக்கும் இடை நிலை தீர்மானங்களை ஒதுக்குவதும் கஷ்டம். மேலும் வட கிழக்கை மீளக் கட்டியெழுப்ப 51 சர்வதேச நாடுகளும் 21 சர்வதேச நிறுவனங்களும் 54.5 பில்லியன் டொலர்களை தர ஒத்துக் கொண்டன. அவை பெருந்தொகைப் பணம். அதனை உதறி எறிவதும் புத்தியீனம். ஆகவே அவற்றை ஏற்க உள்நாடி பேச்சுக்கள் நடந்தன. அவை அவர்களுக்கு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் தந்தன. அவர்களுக்கு வொஷிங்டனில் நடந்த முன்னோடிக் கூட்டத்திற்கு அழைப்பிதழ் தராததும், அதற்காக சொல்லப்பட்ட காரணங்களும் தங்களைச் சுற்றி பயங்கரவாதிகள் பட்டியலிலுள்ளோர் என்ற சர்வதேச வலை பின்னப்பட்டு அது இறுகுவதையும் அல்லது அதைக்காட்டி ஓரம் கட்டப்படுவதையும் உணர்த்தின.

டோக்கியோத் தீர்மானத்தில் ஜப்பான்,அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே என்ற நாடுகள் நடக்கும் பேச்சுவார்த்தைகளை கண்காணிப்பதற்காகக் கூட்டுத் தலைமையாக நியமிக்கப்பட்டிருந்தன. விடுதலைப் புலிகள் இந்த நாடுகளில் அமெரிக்காவும்,ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையான பிரித்தானியாவும் தங்களைப் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்திருப்பதால் அந்த நாடுகளுக்கு இவற்றைக் கண்காணிக்க அருகதையில்லை என்ற பிரச்சினையைக் கிளப்பினார்கள். அவை பேச்சுப் பொருளாக மாற, உதவிக்கு ஒத்தாசையாக இணைந்த நாடுகள் சந்திரிகாவுக்கும் ரணிலின் அரசாங்கத்துக்கும் நெருக்குதல்கள் கொடுத்து நிதி உதவிகளை வடகிழக்கிற்கு பயன்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளோடு இணைந்த அமைப்பை உருவாக்க கோரினார்கள்.

விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சில் ஈடுபடுத்துவதற்காக ரணிலும் அடிக்கடி அமெரிக்காவில் ஜோர்ச் புஷ்ஷைச் சந்திக்கப் பறந்து கொண்டிருந்தார். ரணிலைப் பொறுத்தளவிலும் உதவிக்காக தரப்பட்ட தொகை பெருமளவானது. அது மறுக்கப்படுவதை அவர்



விரும்பவில்லை. ரணிலுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இருந்த இந்த பரிவர்த்தனைகள் சந்திரிகாவுக்குத் திருப்தியைத் தரவில்லை. விடுதலைப் புலிகளால் தனக்கு தனிப்பட்ட பாதிப்பு நிகழக் கூடும் என்ற பயங்கள் வியாபித்தன. அதேசமயம் விடுதலைப் புலிகளிடையேயும் வியூகங்களால் பனி மேகங்கள் வளர்ந்து கொண்டிருந்தன.

### 187. அவைகள் எந்த வகையானவை?

ரணிலின் அரசாங்கம் 18 ஜூலை 2003 இல் வடகிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத் திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகளின் பார்வைக்கு வைத்தது. அதன் பிரகாரம் வடகிழக்கிற்கு விடுதலைப் புலிகள், முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாக சபையில் விடுதலைப் புலிகள் பெரும்பான்மை உள்ளவராயிருப்பர். அவர்களை விட விடுதலைப் புலிகளின் நியமன உறுப்பினர் ஒருவரும் அரசாங்கத்தின் நியமனத்தில் இன்னொருவருமாக இரண்டு தலைவர்களில் யாரேனும் ஒருவர் நிர்வாக சபை தீர்மானிப்பவையை நிராகரிக்கும் அதிகாரம் கொண்டிருப்பார். அவர்கள் உதவித் திட்டத்தால் வட கிழக்குக்கு ஒதுக்கப்பட்ட நிதியை மட்டுமல்லாது, அரசாங்கம் வடகிழக்கில் அமைந்துள்ள மாவட்டங்களுக்காக ஒதுக்கும் நிதியையும் பராமரிப்பது மட்டுமன்றி, அந்த மாவட்டங்களுக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை ஆக்குவதிலும் பராமரிப்பதிலும் ஈடுபடுவர். அதேசமயம் தொடரும் பேச்சுவார்த்தைகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அழைக்கப்பட வேண்டும் எனவும், அவர்களை அந்தப் பேச்சுவார்த்தைகளில் அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாக சபை பற்றி அபிப்பிராயங்கள் தெரிவிக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. இதனை எப்படி அணுகுவது என்ற திக்கு முக்குப் புலிகளுக்கு. ஆனால் ரணில் அதை ஒரு அடிப்படையான திட்டம் என்றும் அதை சாதகமாகப் பார்த்து மாற்றுத் திட்டத்தை அரசாங்கத்தின் கரிசனைக்கு தரக் கோரியிருந்தார்.



### 188.விடுதலைப் புலிகளுக்கு ஏன் திக்குமுக்கு?

ஒரு பிரிக்க முடியாத நாட்டின் அடிப்படையில் ஒற்றை ஆட்சியில் அதிகாரப் பரவல் கூட்டு அமைப்பில் மேற்கொள்வது என்ற ஒஸ்லோ பிரேரணையை பாலசிங்கம் ஏற்றுக் கொண்டார். அதனால் விடுதலைப் புலிகளும் பிரபாகரனும் அவரைத் தொடர்ந்த பேச்சுவார்த்தைகளிலிருந்து நீக்கி, வன்னியிலிருந்து வெளியேற்றி, அவர் லண்டன் திரும்பியிருந்தார். அவர்களுக்கு ஈடுபாடு இருக்கவில்லை. பாரிஸுக்கு மண்ணிலிருந்து போனவர்களும், புலம்பெயர் அமைப்பாளர்களும் அங்கிருந்து பாலா அண்ணா எப்படியிருக்கிறீர்களென்று குசலம் விசாரிப்பதை தவிர இயக்க நடவடிக்கைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் எடுப்பதில்லை. பாலசிங்கமும் அவருக்கு இருந்த மன வெதும்பலில் தான் நல்லாக இருக்கிறேன் என்றும், நீங்கள் தான் கவனமாக இருக்க வேண்டும் என்றும், பிரபாகரனிடம் சொல்லித் தனது படத்தை கொஞ்சம் கொஞ்சமாக கிழிக்காமல் ஒரேயடியாகக் கிழித்து விடச் சொல்லி விடுங்கள் என்றும் கூறி விடுவாராம். இந்த சம்பாஷணைகள் மாலையானால் பாலசிங்கம் ஊற்றியிருந்தால் இன்னும் விசேடமாக இருக்கும்.

ஆயினும் நோர்வேயின் மத்தியஸ்தர் எரிக்சொல்ஹெய்மிற்கு பாலசிங்கத்தில் ஏகப்பட்ட மரியாதையும் நம்பிக்கையும் இருந்தது. ஆகவே அவர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த பலர் ஊடாக பாலசிங்கத்தை விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் பங்குபற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த கேட்டார். ஆயினும், பிரகாகரனும், விடுதலைப் புலிகளின் புலம்பெயர் அமைப்பாளர்களும் அதற்கு இணங்கவில்லை.

அதற்காக பாலசிங்கத்தை முற்று முழுதாக ஓரம் கட்டி விட்டு, ரணிலின் அரசாங்கம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக அலகு பற்றிய திட்டத்தைப் பரிசீலிக்க



அவர்களின் புலம் பெயர் புத்திஜீவிகளை பாரிஸுக்கு அழைத்து மாற்று திட்டம் ஒன்றை தயாரித்தார்கள். அதை தயாரித்த பின் வழமை போல் மதியுரைஞர் பாலசிங்கம் ஊடாக அன்றி, அது பேச்சுவார்த்தைகளின் தலைவராக உயர்ந்த தமிழ்செல்வனால் அரசாங்கத்தின் சார்பில் ஜி.எல்.பீரிஸிடம் 31.ஒக்டோபர் 2003 சமர்பிக்கப்பட்டது.

(வளரும்)

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom




28

**நாடு** தழுவியளவில் பாடசாலைகள் மூடப்பட்ட சூழலில் மீண்டும் திறப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இந்தச் சூழலில் மெய்நிகர் கல்வி நிறைவுக்கு வருகின்றதா என்று பலர் கேட்கிறார்கள். உண்மையில் ஏற்கனவே இருக்கின்ற கல்விமுறைமையின் குறைபாடுகளை ஆராய்ந்து அதற்கான மாற்றுவடிவமாக மெய்நிகர் வகுப்பறைகள் உருவாகியிருக்கின்றன என்பதை மனங்கொள்ள வேண்டும். கொவிட் - 19 தாக்கம் அவ்வாறான மெய்நிகர் வகுப்பறைகள் சிலவற்றை பிரபல்யப்படுத்தியிருக்கின்றன. ஏற்கனவே இருக்கின்ற கல்வி முறைமைகளில் மாற்றம் வரவேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இருந்து வருகின்றது. அந்த அடிப்படையில் இலங்கை போன்ற நாடுகளில் மெய்நிகர் வகுப்பறைகள் விரைவாக அறிமுகமாகி வேகம்பெற்றன, இந்த வாய்ப்பு மேலும் வளர்ந்து விரிந்து செல்லும் என்று சொல்லலாம்.

பாடசாலை என்ற கிராமத்தில் அங்கம் வகிக்கும் சிறுவன் அதனை இழந்ததால் மன அழுத்தத்திற்கு உட்படுகிறான். அவனை அந்த மனஅழுத்தங்களிலிருந்து மீட்டுவருவதற்காகவே பிரத்தியேகமாக பல மெய்நிகர் தளங்கள் உருவாகியிருக்கின்றன. பாடசாலைகளிலிருந்து சிறுவர்கள் பிரிக்கப்படுவது பாரியளவில் கொவிட் - 19 சூழலில் ஏற்பட்டாலும் பாடசாலைச் சூழலை சிறுவர்கள் இழப்பதென்பது பல்வேறு காரணங்களால் தொடர்ந்து நடந்து வருகின்றன. உலகம் முழுமையும் பல காரணங்களுக்காக சிறுவர்கள் தமது வகுப்பறை என்ற கிராமத்திலிருந்து பிரிக்கப்படுகிறார்கள். கொவிட் - 19 தொற்றுநோய்க்கு மத்தியில் பள்ளிகள் மூடப்பட்டு மாணவர்கள் வீட்டிலேயே இருப்பதால், நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டும் என்ற ஆசை




தீவிரமடைந்துள்ளது. இதனைத் தவிர்ப்பதற்கு மெய்நிகர் வகுப்பறை ஒரு தீர்வாக அமைந்திருக்கிறது. இதற்கு பிரத்தியேகமாக உருவாகியிருக்கிறது கிளாஸ் டோஜோ என்ற செயலி.

கிளாஸ் டோஜோ என்பது ஒரு வகுப்பறை மேலாண்மை மென்பொருளாகும், இது கல்வி நிறுவனங்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் படங்கள், வீடியோக்கள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட செய்திகள் மூலம் தொடர்பு கொள்கிறது. டிஜிட்டல் கற்றல் தளங்களை உருவாக்க மற்றும் பகிர்ந்து கொள்ள இந்த தளம் ஆசிரியர்களுக்கு உதவுகிறது, **QR** குறியீட்டை ஸ்கேன் செய்து வீடியோக்களை பதிவு செய்வதன் மூலம் பெற்றோர்கள் அல்லது மாணவர்கள் உள்நுழைய அனுமதிக்கிறது,

கிளாஸ் டோஜோவில் ஆசிரியர்கள் படங்கள், வீடியோக்கள், இணைப்புகள், கோப்புகள் அல்லது அறிவிப்புகளை பாடசாலை அல்லது வகுப்பு மட்டத்தில் பகிர்ந்து கொள்ளவும், தனிப்பட்ட செய்திகளின் மூலம் பெற்றோருடன் தகவல்களைப் பகிரவும் அனுமதிக்கிறது. திட்டங்கள் அல்லது பணிகளுக்கு மாணவர்களை குழுக்களாக ஏற்பாடு செய்ய அனுமதிக்கிறது. இங்கு கிடைக்கின்ற தகவல்களை பல மொழிகளில் மொழிபெயர்க்கும் வசதியும் தரப்படுகின்றது.

கிளாஸ் டோஜோ மூலம், ஆசிரியர்கள் குடும்பங்களுக்கு நேரடிச் செய்திகளை அனுப்பலாம், அறிவிப்புகளை வெளியிடலாம் மற்றும் மாணவர்களுக்கு வகுப்பறை மற்றும் செயற்பாடுகளை ஒதுக்கலாம். இந்தப் பயன்பாட்டை அமெரிக்காவிலும், 180 நாடுகளிலும் உள்ள பாடசாலைகளின் 95சதவீதம் பேர் பயன்படுத்துகின்றனர் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது. யுனெஸ்கோ நிறுவனமும் இந்த மெய்நிகர் தளத்தையும் அதன் கல்விமுறைமையையும் அங்கீகரிக்கின்றது.

சிறுவர்கள் அவர்கள் விரும்பிய ஒரு கல்வியுடன் வளர்ந்தால் அது அற்புதமாக இருக்கும் எனலாம். இதில் அவர்கள் தங்கள் நலன்களை ஆராய்ந்து ஆழமாக்குவார்கள். அவர்கள் தங்கள் திறமைகளையும் திறன்களையும் பார்ப்பார்கள், பாராட்டப்படுவார்கள், அதன்வழி வளர்வார்கள். அவ்வாறு செய்யும்போது, அவர்கள் தங்கள் தனித்துவமான புத்தி கூர்மைகளைத் திறக்கத் தொடங்குவார்கள். உலகின் செல்வம், சக்தி மற்றும் வாழ்க்கைத் தரங்கள் உயர காரணமாக மனித புத்திக் கூர்மை மிக முக்கியமான சக்தியாகும். இன்னும் பல நபர்கள் தங்கள் முழு புத்திக் கூர்மை உணர்ந்து பங்களிக்க முடிந்தால், உலகம் எதிர்கொள்ளும் பல சிக்கல்களை இலகுவாகத் தீர்க்கலாம். மனித முன்னேற்றத்தின் முக்கியமான விடயமாக கல்வி காணப்படுகின்றது. கல்வி என்பது எல்லாச் சிக்கல்களையும் தீர்ப்பதற்கான் மேலான தீர்வாகும் என்பதால், மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், கனிவாகவும் அதனை அணுக வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இதனால்தான் கிளாஸ் டோஜோவின் நீண்டகால குறிக்கோளாக குறிப்பிடப்படுவது பூமியில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்கள் விரும்பும் கல்வியைப் பெற உதவுவதாகும்.

வரலாற்று ரீதியாக, கல்வி மேலிருந்து கீழான அணுகுமுறை கொண்டதாகக் காணப்படுகின்றது. இதில் மாற்றத்தைக் கொண்டுவருவது தான் கிளாஸ் டோஜோவின் பணியாகவுள்ளது. மேலும் கல்வியானது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். கல்வி - சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு சேவை செய்ய வேண்டும் - அவர்கள் உண்மையில் விரும்பும் மற்றும் தேவைப்படும் அனுபவங்களுடன் அவர்கள் விரும்பும் விதத்தில் அமைய வேண்டும்.

இந்த மாற்றம் மெய்நிகர் தளத்தால் பலதுறைகளில் ஏற்பட்டு வருவதைக் காணலாம். இணையத் தொழில்நுட்பம் மக்களுக்கு அவர்கள் விரும்பும் அனுபவங்களின் தொகுப்பைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரத்தை வழங்கியதால் வாடிக்கையாளர் திருப்தி அதிகரித்து வருகிறது.

உதாரணமாக பொழுதுபோக்குகளை எடுத்துக் கொள்ளுங்கள். நுகர்வோரின் தொலைக்காட்சி அனுபவம் ஒரு சில பல் தேசியக் கம்பனிகளால் மட்டுமே இதுவரை காலமும் தீர்மானிக்கப்பட்டது. அனைவருக்கும் ஒரே நேரத்தில் ஒரே பொழுது போக்குத் திட்டங்களை அவர்கள் தீர்மானித்தார்கள். ஆனால், இப்போது நெட்ஃபிக்ஸ் ஒவ்வொருவருக்கும் தம் ரசனைக்கு ஏற்ற பொழுதுபோக்கு சினிமாவை தேர்வு செய்ய உதவுகிறது.

இன்று பெரும்பான்மையான குடும்பங்கள் தங்கள் குழந்தைகளின் பாரம்பரியக் கல்வியில் அதிருப்தி அடைந்துள்ளனர். உண்மையில் குழந்தைகளுக்கு, மிகவும் வித்தியாசமான தேவைகள், ஆர்வங்கள், நம்பிக்கைகள் மற்றும் கனவுகள் உள்ளன. குழந்தைகளின் தேவைகள் பெரும்பாலானவை அவர்கள் தங்கள் பாடசாலை வழங்கக்கூடியவற்றுடன் வரையறுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான குடும்பங்கள் வேறொரு பாடசாலைக்குச் செல்லவோ அல்லது சிறந்த கற்றல் அனுபவங்களை அணுகவோ முடியாது. அவர்கள் அமைதியாக திருப்தியடையாமல் விரும்பாத ஒரு கல்வியைத் தொடர வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதனை வெல்வதற்காக உருவாக்கப்பட்டது தான் கிளாஸ் டோஜோத் தளம்.

கிளாஸ் டோஜோ ஒரு கல்வி தொழில்நுட்ப நிறுவனம். இது தொடக்கப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் குடும்பங்களை தகவல்தொடர்பு அம்சங்கள் மூலம் இணைக்கிறது.

கிளாஸ் டோஜோ மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் குடும்பங்களை தொடர்பு கொள்ள அனுமதிக்கிறது. கிளாஸ் டோஜோவைப் பயன்படுத்த, ஆசிரியர்கள் ஒரு இலவசக் கணக்கைப் பதிவுசெய்து தங்கள் மாணவர்களுடன் 'வகுப்புகளை' உருவாக்குகிறார்கள்.

(தொடரும்)

# ஆண் ஒருவரின் சடலம் மட்டக்களப்பில் மீட்பு

மட்டக்களப்பு - தாழங்குடா பகுதியிலுள்ள வீடொன்றின் கூரையில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாழங்குடா சமுர்த்தி வங்கி வீதியைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான (வயது 45) 3 பிள்ளைகளின் தந்தையான விக்டர் சுஜித்குமார் என்பவரே சடலமாக கடந்த சனிக்கிழமை காலை கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த வெள்ளிக்கிழமை கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட சண்டையைத் தொடர்ந்து மனைவி பிள்ளைகளுடன் அவரது தாயார் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இவ்வாறு அவர்கள் சென்றதன் பின்னர் தனிமையில் இருந்த குறித்த நபர் வீட்டிலேயே தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம், தற்போது பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தனிமைப்படுத்தல் நடைமுறைகள் தண்டனையாக அமையக் கூடாது

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

சுகாதார நடவடிக்கையான தனிமைப்படுத்தல் செயல்முறை ஒரு தண்டனையாகவோ அல்லது தடுப்புக்காவல் நடவடிக்கையாகவோ இருக்கக்கூடாது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்ப்புத் தெரிவிக்கும் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில் சுகாதார வழிகாட்டுதல்கள் பயன்படுத்தப்படுவதற்கு இடமளிக்கக் கூடாது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து அந்த சங்கம் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது.

நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் அல்லது நோயால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுகின்றவர்களுக்கு மாத்திரமே தனிமைப்படுத்தல் பொருந்தும் எனவும் பிணையில் விடுவிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களில் வலுக்கட்டாயமாக தடுத்து வைப்பது சட்டவிரோதமான செயல் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# இயற்கை அன்னையின் கற்ப சுவர் வளிமண்டலம்

முன்சி பஸ்றி

> பஞ்சபூதங்கள் யாவுமே எம்மைக் காக்கத்தான் இருக்கின்றன. எமது தீய செயல்கள் காரணமாகவே அவை எமக்கு எதிராக திரும்புகின்றன. பஞ்சபூதங்களில் ஒன்றான காற்றையும் பாதுகாத்து எதிர்கால சமூகத்தையும் பாதுகாத்து நலமுடன் வாழ்வோம்.



பரந்த உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்துக்கும் காற்று மிகவும் இன்றியமையாதது. பூமியைச் சுற்றி எங்கும் பரவியுள்ள வாயுக்கள் காற்று மண்டலத்தை வளிமண்டலம் என அழைக்கின்றோம் பூமியைச் சுற்றிலும் அதன் மேற்பரப்பில் சுமார் 10 ஆயிரம் கிலோமீற்றர் உயரம் வரை வளிமண்டலம் பரவியுள்ளது. இந்த வளிமண்டலம் புவியின் சுழற்சி உடனே சுற்றி வருகின்றது. வளிமண்டலத்திலுள்ள வாயுக்களின் நைதரசன் (78.08%), ஒட்சிசன் (20.94%) ஆகிய வாயுக்கள் மிகுதியாகவும், காபனிரொட்சைட், ஆகன், ஓசோன் போன்ற வாயுக்கள் குறைவாகவும் உள்ளன.

இவற்றுள் புவியை ஒட்டிய வளிமண்டலத்தில் கீழ்ப் பகுதியில் நீராவி அமைந்துள்ளது. இந்த நீராவியானது இடத்துக்கு இடம் காலத்துக்குக் காலம் வேறுபடுகின்றது. நாம் அன்றாடம் அனுபவித்து உணரக்கூடிய வானிலை காரணிகளான வெப்ப நிலை, அழுத்தம், காற்று மற்றும் மழை பொழிவில் ஏற்படும் மாற்றங்களுக்கு வளிமண்டலம் முக்கிய காரணமாகின்றது.

எனவே, வளிமண்டலத்தின் தன்மை, அமைப்பு,



வானிலை மற்றும் காலநிலை காரணிகளைப் பற்றி விரிவாகக் காண்போம். சூரிய வெப்பத்தில் இருந்தும் ஒளியின் தீவிர தாக்கத்திலிருந்து பூமியைப் பாதுகாக்கும் ஒரு கவசமாகப் வளிமண்டலம் இருந்து வருகின்றது. இதில் உள்ள ஓசோன் படலம் சூரியனில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்களை உறிஞ்சி எடுத்துக்கொண்டு உலகிலுள்ள உயிரினங்கள் அழியாமல் பாதுகாக்க உதவுகின்றது.

மேலும், வளிமண்டலத்தில் வெவ்வேறு வாயுக்களும் நீராவியும் நிறைந்துள்ளன. புவிக்கு மேல் 50 கிலோமீற்றர் வரையிலான வளிமண்டலத்தில் சுமார் 78 % நைதரசனும், 21% ஒட்சிசனும் மற்றும் காபனிரொட்சைட் (0.004%), மிகக் குறைந்த அளவில் ஆகன், கரியமில வாயுக்கள், நியோன், ஹீலியம், மெதேன் போன்ற வாயுக்களும் காணப்படுகின்றன.

வளிமண்டலத்தில் 50 கிலோமீற்றருக்கு அப்பால் ஒட்சிசன் ஓசோன், ஹீலியம், ஐதரசன் அணுக்களும் காணப்படுகின்றன. பூமியிலிருந்து 64 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் வரை ஐதரசன் அணுக்கள் அதிகம் நிறைந்துள்ளன. இதுதவிர 0.01% நீராவி காணப்படுகின்றன. இது வளிமண்டலத்தில் சுமார் 12 கிலோமீற்றர் வரை பரந்துள்ளது.

இவை இவ்வாறு இருக்க இன்றைய கால கட்டத்தில் மனித சமூகம் மாத்திரமன்றி அனைத்து உயிரினங்களும் முகம் கொடுக்கும் மிகப் பெரும் சவால்களில் ஒன்றாக வளிமண்டலம் மாசடைதல் ஆகும். வளி மாசடைதல் விளைவாக ஆரோக்கிய ரீதியில் பலவிதமான தாக்கங்களும் பாதிப்புகளுக்கும் நாம் முகம் கொடுக்கும் நிலை ஏற்படுகின்றது.

இருந்தும் இதன் பாரதூரம் அதன் தாக்கம், பாதிப்புகள் தொடர்பில் போதிய தெளிவு பெரும்பாலான மக்கள் மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை. அதனை அவர்களின் நடத்தைகளும் செயல்களும் வெளிப்படுத்துகின்றன.

குறிப்பாக ஆஸ்துமா, புரோங்கைடிஸ், வீசிங் உள்ளிட்ட சுவாசத் தொகுதி தொடர்பான எல்லா நோய்களும் பெரிதும் அதிகரிப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டு என்று வளி மாசடைதல் குறித்த இந்திய நிபுணர் கலாநிதி பல்லவி பாண்ட் குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில் 2016 ஆம் ஆண்டு காற்று மாசு காரணமாக பலவிதமான நோய்கள் பாதிப்புகளுக்கு உட்பட்ட சுமார் 4.2 மில்லியன் பேர் உலகில் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 3 லட்சம் பேர் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களாகும். சிறுவர்கள் மத்தியில் இடம்பெறுகின்ற மரணங்களில் நான்கில் ஒரு பகுதி வளிமண்டலம் மாசடைதல் காரணமாக என மதிப்பிடப்படுகின்றது.

அதேவேளை, இந்தியாவில் 2019 ஆம் ஆண்டில் மாத்திரம் 16 லட்சத்து 70 ஆயிரம் பேர் வளிமாசு காரணமாக உயிரிழந்துள்ளனர். இவ்வாறு இலங்கையிலும் வளி மாசு ஆரோக்கிய ரீதியான பாதிப்புக்களுக்குப் பெரிதும் காரணமாக உள்ளது. குறிப்பாக கொழும்பில் வளி மாசுக்கு வாகனங்கள் உமிழும் புகை 60% வீதம் பங்கு வகிப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வளிமண்டலம் மாசடைதல் குழந்தைகள் உட்பட எல்லா வயதினரும் ஆரோக்கிய ரீதியில் பாதிப்புக்களுக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகின்றார்கள்.

வளிமண்டலம் செயற்கையாகவும் மாசுபடுகின்றது இயற்கையாகவும் மாசுபடுகின்றது. அந்தவகையில் பெற்றோலைப் பயன்படுத்தி வாகனங்களை இயக்குதல், மக்கள் தொகை பெருக்கம், மரங்கள் அழிப்பு, அணுகுண்டு தாக்குதல், அமிலம் மற்றும் வேதிப்பொருள்களின் பயன்பாடு போன்ற மனித நடவடிக்கைகளும் மற்றும் எரிமலை வெடிப்பு, கதிரியக்கம், துகள்கள் மற்றும் தூசு போன்ற இயற்கை நடவடிக்கைகளும் காற்று மாசுபடுதலுக்குக் காரணங்களாக அமைகின்றன.

மேலும், 2014 ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி 2012 இல் ஏற்பட்ட காற்று மாசுபாடு காரணமாக உலகெங்கிலும் 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இறந்துள்ளனர்.

பஞ்சபூதங்கள் யாவுமே எம்மைக் காக்கத்தான் இருக்கின்றன. எமது தீய செயல்கள் காரணமாகவே அவை எமக்கு எதிராகத் திரும்புகின்றன. பஞ்சபூதங்களில் ஒன்றான காற்றையும் பாதுகாத்து எதிர்கால சமூகத்தையும் பாதுகாத்து நலமுடன் வாழ்வோம்.

ஓர் தாய்க்கும் பிள்ளைக்கும் இடையிலான தொடர்பு இயற்கைக்கும் நமக்கும் இடையிலான தொடர்பு. அந்தவகையில் தாயின் கருவறைக்குள் நாம் எவ்வாறு பாதுகாப்பாக இருக்கின்றோமோ அதேபோன்று இந்த இயற்கை நம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றதாயின் அதற்கு முக்கிய காரணமாக இருப்பது எம்மைச் சூழவுள்ள வளிமண்டலமே ஒரு கருவில் காப்பாற்றுவது போல் கற்ப சுவர்களாக மாறி எம்மைப் பாதுகாக்கின்றது.

# உள்ளூராட்சி மன்றத்தின் பெண் உறுப்பினர்களால் யாழ். மாவட்டத்துக்கு மருத்துவ உபகரணங்கள்





எஸ்.எப்.சி.ஜி. நிறுவனத்தின் முழுமையான நிதிப் பங்களிப்புடன் ஜே.எஸ்.ஏ.ஜி. மற்றும் சி.டபிள்யு.டி. நிறுவனம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற யாழ் மாவட்டத்திலுள்ள பதினேழு உள்ளூராட்சி சபை பெண் உறுப்பினர்களினை இணைத்து பெண்கள் தங்களை வலுப்படுத்திக்கொள்ள உருவாக்கப்பட்ட தளமாகிய வெல் கிளப்பால் கொவிட் – 19 இடர்சூழ்நிலையால் தாக்கத்திற்கு உள்ளாகி இருக்கும் மக்களுக்காக ஆறு லட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனிடம் வழங்கப்பட்டன.

வெல் கிளப் சார்பாக கலந்து கொண்ட செயற்பாட்டுக்குழு பிரதிநிதியும் யாழ்.மாநகர சபை உறுப்பினருமாகிய திருமதி ராகினி ராமலிங்கத்தால் இந்த உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ம.பிரதீபன், அரசசார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட செயலக இணைப்பாளர் ந.தயாபரன், யாழ் சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந.சுகிர்தராஜ், மகளிர் அபிவிருத்தி நிறுவன செயற்திட்ட இணைப்பாளர் கிருத்திகா தர்மராஜா மற்றும் திட்ட உத்தியோகத்தர் பாலசிங்கம் சாரதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மருத்துவ உபகரணங்கள் மாகாண சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரனிடம் இரண்டு பங்காளர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் வெல் கிளப் செயற்பாட்டுக்குழு பிரதிநிதி திருமதி ராகினி ராமலிங்கத்தால் உத்தியோகபூர்வமாக யாழ். மாவட்ட வைத்தியசாலைகளின் தேவைக்காக வழங்கப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்காதீர்!

## அவர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென அரசிடம் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி இடித்துரைப்பு



**இலங்கையில் அமைதி ஆர்ப்பாட்டங்களை நடத்தும் பொதுமக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இந்த உரிமை கொரோனாக் கட்டுப்பாட்டு சட்டங்களால் மீறப்படக் கூடாது.**

**-இவ்வாறு இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளார் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர்.**

அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அப்பால் செல்லக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் கொரோனாவைக் காரணம் காட்டி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடல்கள் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளன.

குறித்த தடைகளைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில், கருத்து வெளியிடும் சுதந்திரம் மற்றும் ஏனைய உரிமைகள் கொரோனாக் கட்டுப்பாட்டு சட்டங்களால் மீறப்படக் கூடாது என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

---

### இலங்கைக்குக் கடத்த இருந்த

## 1,350 கிலோ மஞ்சள் மூடைகள் தமிழகப் பொலிஸாரிடம் சிக்கின

**(ந.லோகதயாளன்)**

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்குக் கடத்த இருந்த சுமார் 1,350 கிலோகிராம் மஞ்சள் மூடைகள் இந்தியாவின் மண்டபம் பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டன.

சமீப காலமாக மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு கடல் அட்டை, கடல் பல்லி, கஞ்சா, சமையல் மஞ்சள் உள்ளிட்ட பொருள்கள் அதிகமாகக் கடத்தப்பட்டு வருகின்றது. இதனைத் தடுக்க கடற்கரை கிராமங்களில் மெரைன் பொலிஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், தனுஷ்கோடி கடற்கரை வழியாக இலங்கைக்குச் சட்ட விரோதமாக சமையல் மஞ்சள் கடத்த இருப்பதாக மண்டபம் மெரைன் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று காலை மண்டபம் அருகே உள்ள வேதாளை கடற்கரை பகுதியில் தமிழகப் பொலிஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.



அப்போது வேதாளை மீன்பிடித் துறைமுகம் கடலில் பதிவு எண் இல்லாத சந்தேகத்துக்கிடமான முறையில் நாட்டு படகு ஒன்று நின்றுள்ளது. அந்தப் படகை நோக்கி மெரைன் பொலிஸார் கடலில் செல்லும் ஸ்கூட்டரில் சென்றபோது பொலிஸ் வருவதைக் கண்டு படகில் இருந்த நபர்கள் கடலில் குதித்துத் தப்பியோடியுள்ளனர்.

பின்னர் மெரைன் பொலிஸார் நாட்டுப் படகில் ஏறி சோதனை செய்தபோது படகுக்குள் இலங்கைக்குக் கடத்துவதற்காக மூடை மூடையாக அடிக்கி வைக்கப்பட்டிருந்த சமையல் மஞ்சள் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து நாட்டுப் படகுடன், சமையல் மஞ்சள் மூடைகளைக் கைப்பற்றிய மெரைன் பொலிஸார் மண்டபம் மெரைன் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்று வழக்குப் பதிவு செய்து தப்பியோடியவர்களைத் தேடி வருகின்றனர்.

---

### வல்வெட்டித்துறையில் தனிமையில் வாழ்ந்த

## 35 வயது பெண்ணை வன்புணர்ந்த 30 வயது நபர் பொலிஸாரால் கைது

(இ.கலையமுதன்)

தனிமையில் வாழ்ந்த பெண் ஒருவரைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியமை, சட்டத்துக்குப் புறம்பான வன்புணர்வு மற்றும் படுகாயம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் 30 வயதுடைய நபர் ஒருவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அத்துமீறி வீடு புகுந்த 30 வயதுடைய நபர், வீட்டில் தனிமையில் வாழ்ந்த 35 வயதுடைய பெண்ணை வன்புணர்ந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகநபர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாலியல் ரீதியாக துன்புறுத்தியமை, சட்டத்துக்குப் புறம்பான வன்புணர்வு, படுகாயம் ஏற்படுத்தியமை மற்றும் அத்து மீறி வீடு புகுந்தமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சந்தேகநபர் பருத்தித்துறை நீதிவான்நீதி மன்றத்தில்முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

---

## சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கஜேன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்பு

### கொலையா? தற்கொலையா? பொலிஸார் தீவிர விசாரணை

**(இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம், இராமாவில் பகுதியில் அவரது வீட்டுக்கு அருகிலுள்ள காணியில், மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரான சிவகுமார் கஜேன் (வயது 28) என்பவரே சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

தூக்கில் தொங்கிய நிலையில் அவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளதால் மரணம் கொலையா? தற்கொலையா? என்ற கோணத்தில் கொடிகாமம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



உயிரிழந்த சிவகுமார் கஜேன், யாழ். மாநகர சபை மேயர் வி.மணிவண்ணனுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு ஏற்கனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் பட்டியலில் ஒருவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### 15 வயது சிறுமி விற்பனை விவகாரம்;

## மேலும் ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் வசமாக சிக்கினர்

### எம்.பி. ஒருவருக்கும் வலைவீச்சு

15 வயது சிறுமி ஒருவரைப் பாலியல் நடவடிக்கைகளுக்காக இணையத்தின் ஊடாக விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் அரச வங்கியொன்றின் முன்னாள் முகாமையாளர் ஒருவரும், பொலிஸ் விளையாட்டுப் பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் ஒரு வரும் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சிறுமியின் தொலைபேசியின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதன்படி, 28 மற்றும் 29 ஆகிய வயதுடையகுறித்தஇரண்டுசந்தேகநபர்களையும் விசாரணைகளின் பின் னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.



முன்னதாக, குறித்த சம்பவத்தின் 12 ஆவது சந்தேகநபராக பொலிஸ் விசேட படைப்பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினால் கைதுசெய்யப் பட்டதுடன், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, குறித்த சிறுமியைப் பாலியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொண்டார் என்ற குற்றச்சாட்டு தொடர் பில் நாடளுமன்ற உறுப்பினர் ஒரு வரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நாடு பூராகவும் 40 லட்சம் தென்னை மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

அரசால் நாடு பூராகவும் 40 லட்சம் தென்னை மரக் கன்றுகள் நடும்வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக யாழ். மாவட்டத்தில் வெற்றுக் காணிகளில் தென்னை மரக்கன்று நடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டுதலின் கீழ் யாழ் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் பிரியந்த பெரேரா வின் நெறிப்படுத்தலின் கீழ் எழுதுமட்டுவாழில் உள்ள யாழ்ஆயருக்குச்சொந்தமான காணியில் 700 தென்னை மரக்கன்றுகளை நாட்டும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தென்னை பனை மற்றும் ரப்பர் செய்கை மேம்படுத் தல் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ வால் குறித்த தென்னை மரக்கன்றுகள் வழங்கி வைக் கப்பட்டதுடன் சனிக்கிழமை எழுதுமட்டுவாழில் யாழ் ஆயருக்குச் சொந்தமான காணியில் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

இராணுவத்தில் 52 ஆவது காலாட் படைத் தலைமை யக இராணுவத்தினரால் குறித்த 700 தென்னை மரக் கன்றுகள் நடும் பணிகள் இடம்பெறவுள்ளன. குறித்த நிகழ்வில் யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட் ணம் அடிகளார், யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா மற்றும் மாவட்ட கியூடெக் நிறுவனத்தின் தலைவர் யூயின் பிரான்ஸிஸ் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்ட னர்.



மலையகத்தில் அடை மழை;

# மேல் கொத்மலை நீர்த்தேக்க மூன்று வான் கதவுகள் திறப்பு

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை காரணமாக மேல் கொத்மலை நீர்த் தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள் ளன.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக பெய்யும் மழை காரணமாகப் பெரும்பாலான நீர்த்தேக்கத் தின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையிலேயே கொத்மலை நீர்த்தேக்கத் தின் ஒரு வான்கதவு திறக்கப்பட்ட நிலையில், நீர் மட்டம் அதிகரித்தமையால் கடந்த சனிக்கிழமை காலை மேலும் இரு வான்கதவுகள் திறக்கப்பட்டன.

இதனால் சென்கிளயார் நீர்வீழ்ச்சியின் நீர்மட்ட மும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

இதேவேளை மேல் கொத்மலை அணைக்கட் டுக்கு கீழ் ஆற்றுப்பகுதியை பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு அறிவிப்பு விடுக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் மற்றும் பொருள்களின் விலையை உடனடியாக குறைக்குக!

வவுனியா நகர் முழுவதும் சுவரொட்டிகள்

"எரிபொருள் மற்றும் பொருள்களின் விலையை உடனடியாக குறை" என்ற வாசகத்தை தாங்கிய சுவரொட்டிகள் வவு னியா நகரின் பல இடங்களிலும் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டியில் "பயிர்களுக்கு ஏற்ற உரத்தை உடனே வழங்கு" என்ற வாசகமும் இணைக்கப் பட்டுள்ளது.

சுவரொட்டியின் கீழ்ப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி ( ஜே.வி.பி.) என உரிமையும் கோரப்பட்டுள்ளமையுடன், இந்தச் சுவரொட்டிகள் கண்டி வீதி, நூலக வீதி, மன்னார் வீதி, ரயில் நிலைய வீதி என வவுனியா நகரின் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. (100)



# மட்டக்களப்பில் மீட்கப்பட்ட கைக்குண்டை செயலிழக்கச் செய்வதற்கு நடவடிக்கை

மட்டக்களப்பு - காத்தான்குடியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை காத்தான்குடி 6 ஆம் வட்டாரத்திலுள்ள கைவிடப்பட்ட காணியிலேயே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு கடந்த வெள்ளிக் கிழமை மாலை, விறகு எடுக்கச் சென்ற பெண்ணொருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கைக்குண்டை மீட்ட காத்தான்குடி பொலிஸார் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவுக்கு அறி வித்துள்ளனர்.



# நீச்சல் பழகிய போது ஏற்பட்ட விபரீதம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சாவு

கொஸ்கொட பிரதேசத்தில் நீரில் மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரி ழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்கள் கொஸ்கொட, துவே மோதர கங்கையில் நீச்சல் பழகிய போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாத்தா மற்றும் அவரின் பேரன் களான 6 வயதுடைய இரட்டைக் குழந் தைகள் உயிரிழந்துள்ளனர் எனத் தெரி விக்கப்படுகிறது. கடற்படையின் சுழியோடி களால் குறித்த சடலங்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.











இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2021 இல் வெளியிடப்பெற்றது.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 48ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**471. இறுதியாக நடைபெற்ற கோபா அமெரிக்க கால்பந்தாட்டத் தொடரை கைப்பற்றிய அணி எது?**
**472. தென்னையின் இளையது எவ்வாறு அழைக்கப்படும்?**
**473.ஆவர்த்தன அட்டவணையில் 2 ஆம் கூட்ட மூலகங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு பெயர் யாது?**
**474.6,8,12,18,26,..... என்ற எண் தொடரின் அடுத்து வரும் இரு உறுப்புகளும் எவை?**
**475. ஒளித்தொகுப்பின் பிரதான விளைபொருள் எது?**
**476. தற்போதைய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் யாது?**
**477. உலகில் உள்ள சமுத்திரங்களின் எண்ணிக்கை யாது?**
**478. 2007 ஆம் ஆண்டு சர்வதேச உலகக் கோப்பையில் இரண்டாம் இடம் பெற்ற அணி எது?**
**479. யாழ்ப்பாணத்தில் பரப்பளவில் மிகப்பெரிய கிராமம் எது?**
**480. வான்,மோட்டார் சைக்கிள் என்பன ஒரே இடத்தில் இருந்து 20ms-1, 20ms-1 என்ற மாறா வேகத்தில் புறப்படுகின்றன ஒரு நிமிடத்தின் பின் இரு வாகனங்களுக்கும் இடையிலான தூரம் யாது?**

பெயர் :- ..................................................
அடையாள அட்டை:- ................................
முகவரி :- ..................................................
மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ..........................

## 46ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**451. அமிர்தலிங்கம்**
**452.எலுமிச்சை பழம்,ஊறுகாய்**
**453. 46,67**
**454. தசுன் சாணக**
**455. நூற்றாண்டு விழா**
**456. மெண்டலீவ்**
**457. ஜதரசன்**
**458. இந்தியா**
**459. அமெரிக்கா**
**460. எந்தவொரு தடவையும் இல்லை**

## 10ஆம் திகதி வெளியான 46ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

**யு.ஜாமளை - கொழும்பு (9சரி)**
**ஐ. கார்த்திகன் - யாழ்ப்பாணம் (8சரி)**
**கே. அனுஷன் - ஏழாலை (8சரி)**
**செ. ஸ்ரீஇராமச்சந்திரன் (6 சரி)**
**ஜெ.வினோஜன் - குடத்தனை (8சரி)**
**வர்ஷா-தெகிவளை (7சரி)**
**எச். றிஸ்மியா - தெல்தோட்டை (7 சரி)**
**பி.ஸ்ருதி - மட்டக்களப்பு (8 சரி)**
**எஸ்.துவாரகா - மட்டக்களப்பு (8சரி)**
**எம்.வர்ணபாலன் யாழ்ப்பாணம் (8சரி)**
**ரி.சராதரன் - குப்பிளான் (8சரி)**
**ஏ.துஷான் - நீர்வேலி (7சரி)**

# இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடு செம்பியன்பற்றில் பயனாளியிடம் கையளிப்பு

மருதங்கேணி - செம்பியன்பற்று பகுதியில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதியுதவியுடன் இராணுவத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட வீடொன்று உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

மருதங்கேணி பிரதேசத்தில் ஜே - 427 செம்பியன்பற்று தெற்கு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் குறைந்த வருமானத்தைப் பெறும் துசிகாந்தன் அஞ்சனாதேவிக்கே வீடு கையளிக்கப்பட்டது.

வீடு கையளிக்கும் நிகழ்வு யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவினுடைய வேண்டுகோளுக்கு அமைவாக குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வீடமைக்கும் வேலைத் திட்டத்தின் மற்றுமொரு அங்கமாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதியுதவியுடன் இராணுவத்தினரால் புதிதாக அமைக்கப்பட்டது.

இந்த வீடு 55 ஆவது படைத் தலைமையகம் மற்றும் 553 ஆவது படைப் பிரிவுகளின் ஏற்பாட்டின் கீழ் 10 ஆவது விஜயபாகு படையணியினரால் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருதி குறைந்த அளவானோர் பங்குபற்றியதுடன் இந்த நிகழ்வுக்கு 55 ஆவது காலாற்படைப்பிரிவின் தளபதி, 553 ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி, இராணுவ உயரதிகாரிகள், அரச அதிகாரிகள், இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட குறிப்பிட்ட அளவினர் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பில் 2ஆம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள்

மட்டக்களப்பில் 2ஆம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு - வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த சனிக்கிழமை 2ஆம் கட்டத் தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதாவது முதலாம் கட்டத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுவரும் நிலையில், 2 ஆம் கட்டமாகத் தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை முதலாம் கட்டமாக தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட அரச உத்தியோகத்தர்கள், சுகாதாரத் துறையினர், பாதுகாப்பு பிரிவினர் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என பல்வேறு தரப்பினருக்கு இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வவுணதீவு பிரதேச செயலகத்தில், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.அனட் ஜோதிலக்ஸ்மி தலைமையில், தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தத் தடுப்பூசியை பெரும்பாலானோர் ஆர்வமாக வந்து பெற்றுக்கொள்கின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பலின் உள்நாட்டு முகவர் 7 பேர் கைது

எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பலின் உள்நாட்டு முகவர் நிறுவன உறுப்பினர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.